# தமிழரசு

16-9-1977 50 கா



# அரசு-மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.




## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

16-9-1977

மலர் : 8 இதழ் : 6

## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| பேரறிஞர் அண்ணா ... | 2 |
| தமிழ வீரன் ... | 6 |
| அண்ணா ஒரு மருத்துவர் ... | 7 |
| தமிழர் தளபதி ... | 8 |
| இதோ ஒரு பெர்னாட்சா ... | 9 |
| அண்ணாவின் வாழ்விலே! ... | 10 |
| செவ்வாழை (சிறு கதை) ... | 12 |
| மாணவ மணிகளுக்கு அண்ணா அளித்த அறிவுரை! ... | 17 |
| நாடகத்திலும் திரைப்படத்திலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் அண்ணா! ... | 19 |
| படமும் செய்தியும் ... | 21 |
| எதிர்காலத்தை நிர்ணயிக்கும தலைவர் நீங்கள்! ... | 28 |
| வருமானமல்ல! குடும்பங்களின் மகிழ்ச்சிதான் அரசுக்கு முக்கியம்! | 29 |
| எனக்குக் கைகூடாதது அண்ணாவுக்குக் கைகூடியது! ... | 30 |
| பெரியார் ஒரு சகாப்தம்! ... | 31 |
| பெரியாரால் பாராட்டப் பெற்ற அண்ணாவின் தலையங்கம் ... | 32 |
| மக்கள் கவிஞர் ... | 33 |
| கைத்தறி பற்றி அறிஞர் அண்ணா ... | 40 |
| உள்ளங் கவர் கள்வன்! ... | 41 |
| அண்ணாவின் பொன்மொழிகள் ... | 43 |
| மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா எழுதிய கடிதம் ... | 44 |
| அண்ணாவின் நாட்டுப் பற்று ... | 47 |


## பாரதி கலை அரங்குக்கு பத்து இலட்சம் ரூபாய்!

### தமிழக முதல்வர் அறிவிப்பு

பாரதி சங்கத்தின் சார்பில் 10-9-'77 அன்று மயிலாப்பூர் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற 'பாரதியார் விழாவில்', பாரதி சங்கத் தலைவர் திரு என். மகாலிங்கம் அவர்கள் பேசுகையில், "சென்னை நகரில் பாரதி பெயரில் கலை அரங்கத்தை மிகச் சிறந்த முறையில் அமைக்க பாரதியார் சங்கம் எண்ணியுள்ளது. இதற்கு 20 இலட்சம் முதல் 30 இலட்சம் ரூபாய் வரை ஆகலாம். இதற்கு முதலமைச்சர் உதவ வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

விழாவிற்குத் தலைமை ஏற்றுப் பேசிய மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் குறிப்பிட்டார் :

"பாரதி சங்கத்தின் எண்ணம் விரைவில் ஈடேறும். தமிழக அரசு, பாரதி கலை அரங்கம் கட்டுவதற்காக ரூபாய் 10 இலட்சம் வழங்கும் என்பதை இந்த விழாவில் தெரிவித்துக்கொள்கிறேன்."



# பேரறிஞர் அண்ணா

— எம். ஜி. ஆர்

## "அண்ணா"

இந்தப் பெயர் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு மகத்தான சக்தியாகத் திகழ்கிறது.

இரும்புத் திரை போட்டு மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த அந்தச் சக்தி, மறைக்க முடியாத ஆற்றல் மிக்க சக்தியாக உருவாகியிருக்கிறது.

அரசியலின் ஆழ்ந்த ஞானம், சமூகத்தைப் பற்றிய தெளிவான அறிவு, மனித உள்ளத்தைப் புரிந்து கொள்ளும் மனத் தத்துவம், பொருளாதாரக் கூறுபாடுகள், கலாசார வரையறை, விஞ்ஞான சாதனைகள் போன்ற பல துறைகளையும் உணர்ந்து கொண்டு, அவற்றின் உண்மையான கோட்பாடுகளில் இரண்டறக் கலந்து, மறுமலர்ச்சிச் சக்தியாக அந்தச் சக்தி மலர்ந்திருக்கிறது.

பல துறைகளிலும் ஆழ்ந்த அறிவு பெற்றுள்ள இந்தக் காரணத்தாலேயே, தெளிந்த உள்ளங்களின் ஒருமித்த பாராட்டையும், பெருமதிப்பையும் அந்தச் சக்தி பெற்றிருக்கிறது.

இந்திய அரசியலில் ஜனநாயகத்தை முழு அளவில் நம்பியிருந்த, வளர்க்க விரும்பிய உண்மையான ஜனநாயக அரசியல் அறிஞர் அண்ணா அவர்களே.

எதிரிகள் ஆனாலும் அவர்களுடைய கருத்தையும் கேட்க வேண்டும் என்ற நெறியையும், எதிரிகளையும் தம் கருத்துக்கு இசைய வைக்கும் ஆற்றலையும் படைத்துக் காட்டி, பண்பு மிக்க அரசியலை இந்த நாட்டில் உருவாக்கியவர் அண்ணா அவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் நுழைவுக்குப் பிறகுதான், வெவ்வேறு கருத்துடையவர்கள் ஒரே மேடையில் சந்தித்து விவாதிக்க முடியும் என்ற உயர்ந்த அரசியல் நாகரிகம் உருவாக ஆரம்பித்தது.

அரசியல் இயக்கம் என்பது உணர்ச்சிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் இடையே போடப்படுகிற ஒரு 'கணக்கு' என்ற நிலையை மாற்றி, ஓர் இயக்கத்தில் ஈடுபட்ட அத்தனை பேரையும் குடும்ப உணர்ச்சி கொள்ள வைக்கும் ஒரு புதிய சித்தாந்தத்தை ஏற்படுத்திய தத்துவவாதி அண்ணா அவர்களே.

விஞ்ஞானத்திலே ஈடுபட்டவர்கள் மனித வாழ்க்கை முறையைப் பற்றியோ, பண்பாட்டைப் பற்றியோ அதிகம் சிந்திப்பதில்லை ஏன், சிந்திப்பவர்களே குறைவு என்றும் கூறலாம்.

ஆனால் விஞ்ஞானம் ஏனைய துறைகளோடு கலந்து, பண்பாட்டோடு இணைந்து, மனிதனை ஆக்கும் சக்தியாக வளர வேண்டும் என்று விரும்பியவர் அண்ணா அவர்கள்.

மனிதர்களுடைய மனம் எதையும் சரியாக எண்ண வேண்டும் என்பதும், அந்த எண்ணத்தை வளர்ப்பதற்கு எல்லாவற்றையும் பற்றிய அறிவை அவர்கள் பெற்றே ஆக வேண்டும் என்பதும் அண்ணா அவர்களின் நோக்கம்.

பொருளாதாரத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சமூக மேம்பாட்டுக்குரிய தேவைகளைப் பற்றிச் சிந்திப்பது அரசி





...யல்வாதிகளிடையே வழக்கமாக இருந்து வருகிறது.

ஆனால் மனித மனத்தையும், பொருளாதாரத்தையும், இயற்கைத் தத்துவத்தையும் ஒன்றாக இணைத்து, ஒரு புதிய சமுதாயத்தைக் காணக் கனவு கண்டு கொண்டிருந்தவர், அண்ணா அவர்கள்.

ஆற்றல் மிக்கவர்கள் மட்டுமே அரசியலில் தலைவராக வர வேண்டும் என்றிருந்த இலக்கணத்தை மாற்றி, ஆற்றல் மட்டும் போதாது, அன்பும், நல்ல பண்பும் வேண்டும், அப்பொழுதுதான் வளமான ஜனநாயகம் அரசியலில் வளர முடியும் என்ற புதிய அரசியல் கோட்பாட்டை உருவாக்கி, அதற்கு இலக்கியமாக

ஓர் இயக்கத்தை நடத்திக்கொண்டிருந்தவர் அண்ணா. அவர்களே!

எல்லோராலும் ''தகுதியுள்ள ஓர் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறும் அரசியல்வாதி'' என்று பாராட்டப்படும் நிலை யாருக்கும் எளிதில் கிடைத்து விடாது. எந்தத் தனி மனிதரும் பிறரால் பாராட்டப்படும் போதோ, உற்சாகப்படுத்தப்படும் போதோ, பெருமைப்படுத்தப்படும்போதோ தன்னையே மறந்து விடும் நிலையை அடைவது தவிர்க்க முடியாததாகும்.

சர்வாதிகார நிலைமையில் செயல்படும் போக்கு அந்தக் குறிப்பிட்ட மனிதரிடம் உண்டாவதும் இயற்கையாகும்.

ஆனால் அண்ணாவைப் பொறுத்த வரையில் இது நேர்மாறானது.

எவ்வளவுக்கெவ்வளவு அவர் உயர்த்தப் பட்டாரோ— தோழர்கள், தொண்டர்கள், பின்பற்றி வருபவர்கள் முதலியவர்களால் எவ்வளவுக்கெவ்வளவு பாராட்டப் பெற்றாரோ—அந்த அளவுக்கு மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு முன்னிலும் அதிக அடக்கத்தோடு, தன்னை மிக மிகச் சாதாரண குடிமகனாக்கிக் கொள்ளும் பண்பை அண்ணாவிடத்தில் நான் கண்டேன்.

உலக அனுபவமே பெறாத சிறு குழந்தைகளுக்கும் கூடப் பழி வாங்கும் நோக்கம் உண்டாவது தவிர்க்க முடியாததாயிருக்கிறது.

ஆனால் அண்ணா அவர்களோ, தன்னையே இகழ்ந்து தலைகுனியச் செய்யும் அளவுக்கு ஏசிச் செயல்படும் ஒருவர், தமது கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் இருப்பவராயிருந்தால்கூட, தம் கட்டளையை மீறிக் கட்சியில் இருக்கவே முடியாதவர் என்றாலும் கூட, அவர் மேல் அநுதாபத்தைச் செலுத்துவாரே தவிர—அவருக்காக மற்றவரிடம் பரிந்து வாதாடுவாரே தவிர—பழி வாங்கும் உணர்வு அவர் உள்ளத்தில் இடம் பெறாத ஒன்றாகும்.

அண்ணா அவர்கள் சொல்லியிருக்கும் ஒரு வாக்கியமே இதற்கு உதாரணமாக அமைந்திருப்பதைச் சொல்லலாம்.

''என்னை யார் வேண்டுமானாலும் வெறுக்கட்டும்; என்னை அழித்துவிடவே முயலட்டும். ஆனால் நான்மட்டும் யாரையும் இழக்க முடியாது. அதைச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்.''



## அறிஞர் பட்டம் பெற்ற வரலாறு

1945-ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் நடந்த ஒரு கூட்டத்துக்கு அண்ணா சென்றிருந்தார். அக்கூட்டத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் திரு. செய்குதம்பிப் பாவலரும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் பேசும் போது கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றிற்கு அண்ணா புது விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கம் பொருத்தமுடையதாகவே இருந்தது. அதைக் கேட்டுப் புலவர் செய்குதம்பிப் பாவலர் மிகவும் வியப்படைந்தார். கூட்டம் முடிந்ததும் அண்ணாவும், செய்குதம்பிப் பாவலரும் கம்பராமாயணத்தைப் பற்றிக் கலந்து பேசினார்கள். அப்போது செய்குதம்பிப் பாவலர், அண்ணாவின் கூரிய அறிவையும், சொற்போர் புரியும் ஆற்றலையும் அறிந்து வியந்தார்; அண்ணா அவர்களுக்கு **'அறிஞர்'** என்னும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார். அதன் பிறகு அண்ணாவை எல்லாரும் **'அறிஞர் அண்ணா'** என்று அழைக்கலாயினர்.

பிற்காலத்திலோ அண்ணாவின் பேரறிவைக் கண்டு வியந்தவர்கள் அவருக்கு **'பேரறிஞர்'** என்னும் பட்டத்தை வழங்கினார்கள். 'அறிஞர் அண்ணா' அவர்கள், **'பேரறிஞர் அண்ணா'** என்று அழைக்கப்பட்டார்.

அவர்தான் அண்ணா! தமிழ் மக்களின் தனித் தலைவர்.

ஆனால் சில சமயம், இந்த இவருடைய நல்ல பண்பைச் சிலர் தங்கள் சுயநலத்துக்குப் 'பயன் படுத்துகிறார்கள் என்று தெரிந்தும்கூட அவர்களும் ஒரு காலத்தில் திருந்தி நல்வழிக்கு வந்து விடுவார்கள் என்று நம்பிக் காத்திருந்தவர் நம் அண்ணா. பல முறை அப்படி நிறைவேறியும் இருக்கிறது.

தம்முடைய கட்சி வெற்றி பெற வேண்டுமென்பதற்காகச் சமுதாய நலனையோ, தனி மனிதர்களின் வளர்ச்சியையோ, சிந்திக்காமல் செயல்படுவதை அறவே வெறுத்தவர் அண்ணா. அவருக்குத் தனி மனிதர்களின் வளர்ச்சியும், அதன் மூலம் சமுதாய வளர்ச்சியுமே முக்கியம்.

கட்சி என்பது என்ன? பல மனிதர்களின் சேர்க்கைதானே? சமூகமும் அப்படித்தானே!

தனி மனிதர்களை வளர்க்க முடியாத கட்சி, சமுதாயத்தை எப்படி வளர்க்க முடியும்?

அதனால்தான் தமது கட்சியில் உள்ள எல்லோருமே அறிவிலோ, அனுபவத்திலோ, திறமையிலோ, தியாக உணர்விலோ, தகுதியிலோ குறைந்தவர்களாக இருக்கக் கூடாது என்று அவர் கருதினார்.

பொதுவாகவே அரசியல் கட்சிகளில் உள்ள தலைவர்கள் திறமை மிகுந்த பிறர் தங்கள் கட்சிக்குள் வந்தால், எங்கே தங்களுடைய பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சுவதைக் காண்கிறோம்.



### உத்தமர் காந்தியடிகளின் உள்ளம்!

"ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான்! மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி, நல்லாட்சி அமைப்பார்! பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி, மக்களுக்கு நல்வழி காட்டுவார்! உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது!"

—அண்ணா

இதற்கு மாறாக அண்ணா அவர்கள், அறிவும், திறமையும் மிகுந்தவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கட்சியில் இருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு கட்சிக்கு நல்லது என்று கருதியவர். அவர்களை வரவேற்கவும் செய்தார்; வளர்க்கவும் செய்தார்.

வளர்த்த கடாவே மார்பில் பாய்வது அரசியல் இயக்க வரலாறுகளிலே வழக்கமாக நடைபெற்று வருகிற சம்பவம் என்றாலும் கூட, அப்படிப்பட்ட தீய சக்திகளால் தம்மை அழித்துவிட முடியாது என்ற தன்னம்பிக்கையும், ஆற்றலும் படைத்திருந்தவர்.

எத்தனையோ அரசியல் கட்சிகளில் ஒவ்வொரு தகுதியில் சிறந்தவர் வளர்வதைக் கண்டிருக்கிறோம். ஆனால் அழகு தமிழில் எழுதக் கூடிய ஆற்றல் பெற்றோரை, உணர்ச்சி மிக்க தமிழில் உரை நிகழ்த்தும் திறன் மிக்கோரை, புதுமைக் கருத்துப் படைக்கும் சிறப்பு வாய்ந்த நாடக ஆசிரியர்களை, துள்ளும் தமிழ் நடையிலே கவிதைகள் பொழியும் நல்ல பல கவிஞர்களை, பகுத்தறிவுடன், இன்பத்தைக் கலந்து அளிக்கும் இலட்சியம் உள்ள கலைஞர்களை, பண்புமிக்க அரசியலை நடத்தக்கூடிய தகுதி மிக்க தலைவர்களை இன்னும் பலப்பல அரிய சக்திகளையெல்லாம் இந்த நாட்டில் தோற்றுவித்திருக்கும் பேராற்றல் மிக்க மாபெரும் சக்தி, அறிஞர் அண்ணா அவர்கள் தான்!

இவரால் தோற்றுவிக்கப்பட்டவர்களில் பலர் வேறு இயக்கங்களில் இருப்பார்கள். ஆனால் தோற்றுவிக்கும் சக்தியாக இருப்பவர் அவர் என்பது நான் கண்கூடாக அறிந்த உண்மை!

எத்தனையோ பேர் தொண்டர்களால், தலைவர்களாக்கப்படுகின்றனர்.

ஆனால் அண்ணாவின் ஸ்தானம் யாராலும் அளிக்கப்பட்டதில்லை.

அந்த ஸ்தானத்துக்காகவே அவர் உருவானவர்!

அவருடைய செயல் அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுத்ததே தவிர, பிறருடைய செயலால் கொடுக்கப்பட்டதுமில்லை; பிறரிடமிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டதுமில்லை. அவருக்கு என்று இருந்தது அந்த ஸ்தானம். அவருக்கே சொந்தமாகிவிட்டது அந்த ஸ்தானம். இந்த உயர்ந்த் ஸ்தானத்தின் ஏகப் பிரதிநிதியாகத் திகழ்ந்த அவர், மக்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் ஆட்சி நடத்திய ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கும், எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுத்து பொது இயக்கங்கள், போராட்ட இயக்கங்கள் ஆகியவற்றை நடத்துகிற முறையில், அமைதியையும், அற வழியையும் தாம் துன்பத்தை ஏற்றுக்கொண்டு, பிறருக்குத் துன்பம் தராத உள்ள பண்பையும் மேற்கொண்டதில் காந்தியடிகளுக்கு இணையாக விளங்கினார்!

அண்ணாவின் எழுத்து; மனித உள்ளத்தைப் பண்படுத்தும்!

அண்ணாவின் பேச்சு! மனிதனை மனிதனாக்கும்!

அண்ணாவின் சிந்தனை! நாட்டின் நலிவைப் போக்கும்.

அண்ணா சிரிப்பார்; தம்மை இழிவுபடுத்துபவர்களைப் பார்த்து.

அண்ணா கண்ணீர் சிந்துவார்; எதிரிகளேயானாலும்கூட அவர்களுக்கு ஏற்படும் துன்பத்தைக் காணச் சகிக்காமல்.

அண்ணா வெகுண்டெழுவார்; பிறர் ஜாதி பேதத்தை வியாபாரமாக்கும்போது.

அண்ணா தொல்லைப்படுவார்; மக்களுக்கு அரசியல் விழிப்பு ஏற்படுவதற்காக!

அண்ணா நடிப்பார்; சமூகத்தின் சீரழிவைப் போக்குவதற்காக.

அவர் ஒரு புதிய சமுதாயத்தின் சிற்பி.

திறமை, தந்திரம், சுண்டிப்பு இவற்றையெல்லாம் கடந்த பாச உணர்வுத் தீ கொழுந்து விட்டு எரிய அந்தப் பண்புச் சுடர் ஒளி வீசுகின்ற மனித குலத்தின் தத்துவவாதி!

பழைமையையும் புதுமையையும் இணைத்து, பாசத்தின் அடிப்படையில் ஜாதி பேதம் போன்றவைகளை ஒழித்து, மனித இனத்தை ஒன்றுக்கிய அரசியல் ஞானி!

விஞ்ஞானத்தில் மெய்ஞ்ஞானத்தைக் கலந்து, வாழ்க்கையில் வளம் பெருகச் செய்து, 'அன்பு' என்னும் அகன்று விரிந்த சமதர்மக் கோட்பாட்டின் செந்நெறிகளைச் செயற்படுத்தும் இலட்சியத்தை மேற்கொண்டு, புதிய சமுதாயத்தைத் தோற்றுவித்த வழிகாட்டி!

அவர்தான் அண்ணா!

# தமிழ வீரன்!

தமிழுக்குத் தொண்டுசெய்து சிறைக்குச் சென்றேன்,
தலைசிறந்த பேச்சுவல்லோன்; தமிழ வீரன்;
தமர் என்றும் தான் என்றும் நினைப்ப தன்றித்
'தமிழ் நாட்டின் நலத்தினுக்கே உயிர் உடல்கள்
அமைக' என இரவு பகல் உழைக்கும் மேலோன்.

—கவிஞர் பாரதிதாசன்.



# அற்புதம்சூழ் மாலுமி!

"அண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணன் அழுக்கெடுப்பில் வாய்மொழியில் பண்ணவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதம்சூழ் மாலுமியென் றுடு !"

—தமிழ்த் தென்றல் திரு. வி. க.



# அண்ணா ஒரு மருத்துவர்!







இளந் தமிழுலகத்தில் — எழுகின்ற தமிழுலகத்தில் — இன்று 'அண்ணா' என்று அருமையாக அழைக்கப்படுகின்றவர் தோழர் திரு. அண்ணாதுரை. அவர் ஆயிரம் மேடை ஏறிய அறிஞர்; பல்லாயிரம் மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய கூரிய சொல்லாளர்; கண்ணினின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்.

அண்ணாதுரை கலையறிந்தவர். தமிழ் நாட்டின் பழைய நிலையறிந்தவர். ''மன்னும் இமயமலை எங்கள் மலையே'' என்று மார்தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய், களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர் அவர்.

தமிழ்க் குலத்தை அழிக்கும் வேர்ப் புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்குமாறில்லை; ஊழ்வினையே பேசி ஆள்வினை அற்றிருக்குமளவும் நாம் உய்யுமாறில்லை என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர்.

தமிழ் நாட்டைப் பிடித்த பீடைகள் ஒழிய வேண்டுமாயின், ''நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்'' என்று வள்ளுவர் வகுத்த மருத்துவ முறையைத் தயங்காது தமிழர் கையாளுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. 'புண்ணுற்ற மேனியைப் புறம் பொதித்து மூடுதலால் என்ன பயன்?' என்பது அவர் கேள்வி.

மதிநலம் வாய்ந்த மருத்துவர், அழுகிய தசையைப் பார்த்து அறுத்தால், தமிழ்க் குலம் தலையெடுக்கும் என்பதில் என்ன தடை? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்வரது நச்சுப்பகைமையை நசுக்காவிட்டால் நாடு நலம் பெறுவதெப்படி?

தமிழர் வாழ வேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும் பெருங் குறிக்கோளுடையவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

—சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை

# அண்ணாவின் விருந்து!



இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்கு செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல் வன்மையும், எழுத்து வன்மையும் இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும், இனவெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப்பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் வாலிபர்களையும் தீண்டாமலில்லை. அண்ணாதுரையின் பேச்சிலும், எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒரு வித கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது, அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்களும் சூழ்ந்தனர்.

அண்ணாதுரை, ''சமூக சீர்திருத்தத்திற்குப் புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை'' எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.





—ப. ஜீவானந்தம்

# தமிழர் தளபதி



1948-ஆம் ஆண்டில் சென்னைத் தீவுத் திடலில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடை பெற்றது. அந்தக் கூட்டத்தில் அண்ணுவும் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் அண்ண அவர்கள் நிகழ்த்திய பேருரை திரு.வி.க.வை மிகவும் கவர்ந்துவிட்டது.

அதே கூட்டத்தில் அண்ணுவுக்குப் பிறகு பேசிய திரு.வி.க., ''தமிழகத்தில், 'திரு.வி.க. நடை,' 'திரு.வி.க. தமிழ்', 'திரு.வி.க. பேச்சு முறை', 'திரு.வி.க. எழுத்து' என்று இன்று நிலவி வருவது மாறி, இனி வருங்காலத்தில், 'அண்ணுதுரை நடை', 'அண்ணுதுரை தமிழ்', 'அண்ணுதுரையின் பேச்சு முறை', 'அண்ண துரை எழுத்து' என்றுதான் வரப்போகிறது. வருங்காலத்தில் தமிழ் மொழி அழிந்து சிதைந்துவிடுமோ, அதை யார் காப்பாற்றப் போகின்ருர்களோ என்று நான் ஐயப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனுல், இனி நான் ஐயப் படாமல் அமைதியாகவே சாவேன். அண்ண துரை தமிழுக்குத் தொண்டு செய்வதை என் ணுல் மறக்கவே முடியாது. அண்ணுதுரை ஓர் அரசியல்வாதி மட்டும் அல்லர். அவர் தாய்நாட்டையும் தாய்மொழியையும் காக்கும் தமிழர் தளபதி' என்று அண்ணுவைப் பாராட்டிப் பேசினுர்.





மண்ணில் சிறந்த அரசியல் ஆட்சியே மக்களாட்சி
விண்ணின் சிறந்தது! சான்றவர் மேலது! மேன்மைமிகும்
அண்ணலார் காந்தி அறவழி சென்றே அரசியலின்
கண்ணியம் காக்கும் கரமெங்கள் அண்ணு கவின்கரமே.'

—கவிஞர் வாணிதாசன்.



# இதோ ஒரு பெர்னாட்ஷா



—ரா. கிருஷ்ணமூர்த்தி, 'கல்கி' ஆசிரியர்.

தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் பெர்னாட்ஷாவையும், கிப்ஸனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். ''நாடகம், கீடகம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு பெர்னாட்ஷாவுக்கும், ஒரு கிப்ஸனுக்கும் எங்கே போவது? திருடப் போக வேண்டியது தான்!.'' என்று சொல்லுவார்கள். அப்படியெல்லாம் திருடவும் கிருடவும் போக வேண்டாம், தமிழ்நாடு நாடகாசிரியர் இல்லாமல் பாழ்த்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

இரண்டு வாரத்திற்கு முன்பு திருச்சிராப்பள்ளியில் ''ஓரிரவு'' என்னும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததின் பயனாக, ''இதோ ஒரு பெர்னாட்ஷா தமிழ் நாட்டில் இருக்கிறார்! கிப்ஸனும் இருக்கிறார்! இன்னும் கால்ஸ்வொர்த்தியுடம்கூட இருக்கிறார்'' என்று தோன்றியது.

நாடகக் கதையும், கதையை அமைத்திருந்த பாணியும், கட்டுக்கோப்பும், காட்சிகளின் அமைப்பும், சம்பாஷணையும் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கி, என்னைத் திணற அடித்து விட்டன. நாடக முடிவில் என்னைப் பேசும்படி சொன்ன போது ஒன்றும் பேசத் தோன்றவில்லை. ''நன்றாகயிருக்கிறது; மிக நன்றாகயிருக்கிறது; அதிக நன்றாகயிருக்கிறது!'' என்று தான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது.

காங்கிரஸுக்கும், தேசிய விடுதலை இயக்கத்துக்கும் எதிர்க் கட்சிகள் என்று கருதப்படும் திராவிடக்கட்சி, சுயமரியாதைக் கட்சி, ஜஸ்டில் கட்சி, ஆகியவற்றில் மிகச் சிறந்த எழுத்தாளரும், சொற் பொழிவாளரும் சிலர் இருக்கிறார்கள்.

திராவிடக்கட்சி-சுயமரியாதைக் கட்சி-ஜஸ்டிஸ் கட்சிச் சொற்பொழிவாளர்களிலே தற்சமயம் தலைசிறந்து விளங்குகிறவர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள். அவர் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். ''சொற்பொழிவு என்றால் இதுவல்லவா சொற்பொழிவு, தட்டுத் தடுமாறி சொற்களுக்குத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே!'' என்று எண்ணத் தோன்றும்.

திரு அண்ணாதுரையின் சொற்பொழிவு ஒன்றை நான் நேரில் கேட்காவிட்டாலும், நண்பர் ஒருவர் அதைப் பற்றிக் கூறியது என் மனதில் பதிந்து போயிருக்கிறது. சென்ற ஆண்டின் இறுதியில் சென்னையில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடந்தது. அச்சமயம் நான் பம்பாயில் அகப்பட்டுக் கொண்டேன். ரயில் பாதையும் உடைப்பட்டுப் போயிருந்தபடியால், மகாநாட்டுக்குவர முடியவில்லை. திரும்பி வந்ததும் எழுத்தாளர் மகாநாட்டைப் பற்றி விசாரித்தேன். திரு அண்ணாதுரையின் பிரசங்கத்தைப் பற்றி ஒருவர் சொன்னார். நமது கிராமங்களிலுள்ள ஜனங்கள் அறிவு விளக்கம் பெறாமல் பழைய குருட்டு நம்பிக்கைகளிலே ஆழ்ந்துகிடப்பதைப்பற்றி திரு. அண்ணாத்துரை பேசினாராம். ''மின்சார சக்தியைக் கண்டு பிடித்தவர் யார் என்று கிராமவாசியைக் கேளுங்கள், தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்று தெரியும். நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார் என்று கேளுங்கள் தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்பது மட்டும் தெரியும். ரேடியத்தின் உபயோகம் என்னவென்று கேளுங்கள், தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் என்னவென்று கேட்டால், உடனே எருமைக்கடா என்று பதில் வரும் ....'' இந்த மாதிரி யமனையும் எருமைக்கடாவையும் வைத்துக் கொண்டு திரு. அண்ணாதுரை மேற்படி மகாநாட்டில் வெளுத்து கட்டி விட்டார் என்று பிரசங்கத்தைக் கேட்ட நண்பர் சொன்னார். எழுத்தாளர் மகாநாட்டிலேயே திரு அண்ணாதுரை பிரசங்கந்தான் விசேஷ நிகழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

ஆனால், பேச்சும், பிரசங்கமும் சொற்பொழிவும் உடனுக்குடனே காற்றிலே போய்விடுகின்றன. கூட்டத்துக்கு வருகிற ஜனங்களில் 100க்கு 50 பேர் சொற்பொழிவை சரியாகக் கவனிப்பதேயில்லை; மற்ற ஐம்பது பேர் ஒரு காதினால் வாங்கி, இன்னொரு காதினால் விட்டு விடுகிறார்கள்.

பேச்சைக் காட்டிலும், எழுத்து அதிக வலிமையுடையது. ஆனால் பேச்சு எழுத்து எதுவும் நாடகத்துக்கு அருகிலும் வராது- ஜன சமூகத்தை உண்மையில் சீர் திருத்த விரும்புகிறவன் கையாள வேண்டிய சாதனம் நாடகமேயாகும்.

நடிக்கக்கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரியது. அந்த ஆற்றல் திரு அண்ணாதுரையிடம் பூரணமாக அமைந்திருக்கிறது என்பதை ''ஓரிரவு'' நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன்.

# அண்ணாவின்

## வாழ்விலே!

**விடுதலைப் போர்த் தியாகிகளிடம் அண்ணா கொண்டிருந்த மதிப்பு!**

விடுதலைப் போர்த் தியாகிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் அண்ணா. தமிழகத்தில் நீண்ட நாட்களாக நிறைவேறாமல் இருந்த ஒரு தியாகியின் மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றினார். வாஞ்சி என்னும் தியாகியின் மனைவி தனக்கு வாழ்க்கைப் 'பென்சன்' வேண்டும் என்று பல்லாண்டுகளாகக் கேட்டு வந்தார். ஆனால் அவரது வேண்டுகோள் நிறைவேற்றப்படாமலேயே இருந்துவந்தது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த அம்மையாரின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தார். பாவம், அந்த அம்மையார் முதுமை அடைந்திருந்ததால், அண்ணா தந்த பென்சன் பணத்தை நீண்ட காலம் வாங்கி அனுபவிக்க இயலாமல் இயற்கை எய்தி விட்டார்.

என்றாலும், தியாகிகளிடமும் அவர்களது குடும்பத்தவரிடமும் அண்ணா கொண்டிருந்த மரியாதையை இந்த நிகழ்ச்சி எடுத்துரைத்து வருகிறது.

**கோவா விடுதலை வீரருக்கு விடுதலை வாங்கித் தந்தவர் அண்ணா!**

முதன் முறையாக அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது கூட, அண்ணா அவர்கள் அந்தப் பயணத்தை வெறும் சுற்றுலாப் பயணமாக்கி விடாமல் மிகப் பெரும் தியாகி ஒருவரின் வாழ்விலே மலர்ச்சி ஏற்படுவதற்குரிய வாய்ப்பாக்கிக் கொண்டார்.

கோவா விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு, நீண்ட காலமாகச் சிறையில் கிடந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்தார் ரானடே. அவரது துன்பத்தை இந்திய அரசோ, அண்ணாவுக்கு முன்பு இருந்த மாநில அரசோ பொருட்படுத்தவில்லை. ஆனால் விடுதலை வீரர் ரானடே படும் துன்பம் அண்ணா அவர்களின் இதயத்தை மிகவும் வருத்தியது. அவரது விடுதலைக்கு வழி என்ன என்று தமக்குள் சிந்தித்து வைத்துக் கொண்டார்



உலகப் பொதுமறை திருக்குறளை அன்புப் பரிசாக அளித்துவிட்டு, போப்பாண்டவருடன் பேரறிஞர் அண்ணா கைகுலுக்கி மகிழ்ந்ததுடன், கோவா விடுதலை வீரர் ரானடே அவர்களை விடுதலை செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.

அமெரிக்கச் சுற்றுலாவைத் தொடங்கியபோது, இத்தாலி நாட்டுக்குச் சென்று, வாடிகன் நகரில் உள்ள போப்பாண்ட வரைச் சந்தித்தார். கோவா வீரர் ரானடே விடுதலை செய்யப் பட வேண்டிய அவசியத்தை போப்பாண்டவரிடம் எடுத் துரைத்தார். அண்ணாவின் வேண்டுகோளை அன்புடன் ஏற் றுக்கொண்ட போப்பாண்டவர் போர்ச்சுக்கீசிய அரசிடம் தொடர்பு கொண்டு ஆவன செய்தார். பல்லாண்டுகளாகச் சிறை இருந்த ரானடே விடுதலை பெற்றார்.

கோவா மக்கள் அனைவரின் இதயங்களும் குளிர்ச்சி பெற்றன. அண்ணாவுக்கு வாயார வாழ்த்துக் கூறினார்கள் கோவா மக்கள்.

## "இந்த உயிர் இருந் தென்ன? போய் என்ன?"

அண்ணா அவர்கள் நோய் வாய்ப்பட்டு, அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சைக்கு ஆளானார்கள். சிகிச்சையெல் லாம் முடிந்து, ஓரளவு உடல் நலம்பெற்றுத் தாயகம் திரும்பி னார்.

டாக்டர்கள் அண்ணாவைப் பல விதத்திலும் கடுமையாக எச்ச ரித்து வைத்திருந்தார்கள். 'அதிகம் உரையாடக்கூடாது; அலுவல்களில் அதிகம் ஈடுபடக் கூடாது' என்றெல்லாம் டாக் டர்கள் அவருக்குத் தடை விதித்திருந்தார்கள். ஓடுகின்ற ஆற்றை, உயரே இருந்து அழகு சொரியக் குதித்து வரும் அருவியை எவராலும் கட்டுப் படுத்த முடியுமா? அருவி போன்ற இலட்சிய எண்ணங்களை இதயத் திலே கொண்டிருந்த அண்ணா அவர்களால் டாக்டர்களின் ஆணைகளை மீறாமல் இருக்க முடிய வில்லை.

சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் சட்ட மன்றத்தில் ஏகமனதாக நிறை வேற்றப் பட்டிருந்தாலும்—பெயர் சூட்டும் விழா நடை பெறாமல் இருந்தது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அண்ணா அவர்கள் முதன் முதலாகக் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றியது தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில்தான்.

'அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அண்ணாவின் குரல் கம்பீர மாக இருக்குமா? அல்லது அதற்கு ஊறு நேர்ந்திருக்குமா?' என்றெல்லாம் மக்கள் எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், அண்ணா அவர்கள் மெலிந்த உடலோடு எழுந்து நின்று, ''தலைவர் அவர்களே!'' என்று மொழிந்த உடனே, அந்தக் கம்பீர ஒலி கேட்டு, மக்கள் எழுப்பிய கர ஒலி, வானத்தையே பிளந்தது என்று தான் கூற வேண்டும். மக்கள் ஒரு முறை கரஒலி எழுப்பியதோடு நிற்கவில்லை—மீண்டும் மீண்டும்-நினைத்து நினைத்துக் கரஒலி எழுப் பினார்கள், 'தலைவர் அவர்களே' என்ற இரண்டு வார்த்தைகளைக் கேட்டவுடனேயே!

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்றும், கலந்து கொண்டால் உடல் நலம் பாதிக்கும் என்றும் மருத்துவர்கள் அண்ணாவுக்கு எச்சரிக்கை செய்தி ருந்தார்கள். என்றாலும் அண்ணா அவர்கள் அதனைப் பொருட் படுத்தவில்லை. தமது அரும் பெரும் இலட்சியம் நிறைவேறும் இனிய விழாவில் கலந்து கொண் டார்; அந்த விழாவிலே அண்ணா குறிப்பிட்டதாவது:

**''இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டாம். உடல் நலம் பாதிக்கும் என்று டாக்டர்கள் கூறி னார்கள். நான் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எந்த வொரு இலட்சியத்திற்காக இத் தனை காலம் போராடி வந்தோமோ, அந்த இலட்சியம் நிறைவேறும் இந் இனிய விழாவில் கலந்துகொண் டால் உயிருக்கு ஆபத்து வரும் என்றால்—இந்த உயிர் இருந் தென்ன, போய் என்ன?''** என்று உயிரை வெறுத்து உணர்வை மதித்து உரை ஆற்றினார்கள்.

இலட்சியம் நிறைவேறிட உயி ரையும் பொருட்படுத்தாதவர் அண்ணா என்பது, இந்த நிகழ்ச்சி யின் வாயிலாக வரலாற்றில் பொறித்து வைக்கப்பெற்றது.





### பிற மொழிகளின் கலப்பு

கண்ணுக்கு மையிடுவது போல, பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்—மை அதிக மானால் கண் எப்படிக் கரித்து விடுகிறதோ, அது போல் பிற மொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத் தான நிலையை உண்டாக்கும்.

—பேரறிஞர் அண்ணா

# செவ்வாழை

—பேரறிஞர் அண்ணா.



செங்கோடன் ஆசையோடு வளர்த்தான் செவ்வாழை! அதைச் சுற்றிப் பச்சை உள்ளங்களைப் படரவும் விட்டான்! கடைசியில் அவனுக்கோ, அவன் குழந்தைகளுக்கோ ஒரு பழம் கிடைத்ததா? என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் விளக்கியுள்ளார் இக் கதையில்.

**செ**ங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளைபோல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும்கூட, வயலிலே அவன் பட்ட கஷ்டத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப் புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப் பட்டு இருக்கிறதா என்று கவனித்து விட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது! செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும்போதும், கல் மண்ணைக் கிளறிவிடும் போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம்-அவனுடைய முதல் பையன்-காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கறையும் காட்டுகிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

''குப்பி! ஏதாச்சும் மாடு கீடு வந்து வாழையை மிதிச்சுவிடப் போகுது. ஜாக்கிரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று-ஆமாம், செவ்வாழைன்னு சாமான்யமில்லே. குலே, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும்-ரொம்ப ருசி-பழத்தைக் கண்ணுலே பார்த்தால்கூடப் போதும், பசியாறிப் போகும்'' என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள்-அதுமட்டுமா-பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத்தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறு எதைப் பற்றி பேசிக் கொள்ள முடியும்-அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத் தோடு பற்றியா, அண்ணன் வாங்கி வந்த 'ரேடியோ'வைப் பற்றியா, எதைப் பற்றிப் பேச முடியும்? செவ்வாழைக் கன்று தான் அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை சகலமும்!

மூத்த பயல், கரியன், 'செவ்வாழைக் குலே தள்ளியதும், ஒரு சிப்புப் பழம் எனக்குத்தான்'— என்று சொல்லுவான்.

''ஒண்ணுகூட எனக்குத் தர மாட்டாயாடா-நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன். கவனமிருக்கட்டும்-வறுத்த வேர்க்கடலே கொடுத்திருக்கிறேன், கவனமிருக்கட்டும்''-என்றுஎதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்.

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே, ''உனக்கு ஒரு சீப்புன்னு, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு'' என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றுவது பையன், முத்து, ''சீப்புக் கணக்குப் போட்டுக் கிட்டு ஏமாந்து போகாதீங்க-ஆமாம்-பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துடுவாங்களோ, யாரு கண்டாங்க''-என்று சொல்லுவான்-வெறும் வேடிக்கைக்காக அல்ல-திருடியாவது மற்றவர்களை விட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டான் அவன்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது



''மனிதன் பறக்கக்கூட கற்றுக் கொண்டான்! பார் முழுவதையும் 'பாக்கெட் சைஸ் ரேடியோ'வுக்குள் அடக்கிவிட்டான். ஆனல் இன்னமும் பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டு பிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன்படவில்லை!''

—அண்ணு

செவ்வாழை. உழைப்பு அதிகம், வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான்-செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத் தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள் பிரியமாகச் சாப்பிடுவார்கள். செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள், ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது-கரியனும் முத்துவும், எப்படி விலே உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும் செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும், என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படி செய்தது. உழவன் செங்கோடனிடம் எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் 'பழமும் பட்சணமும்' வாங்கித் தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேரமுடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும்-குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! உழைப்பின் பெரும் பகுதி வயலிலே செலவாகிறது-அதன் பலனில் மிகப் பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்துவிடுகிறது. இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான், அவன் சொந்தமாக - மொத்தமாக, பலன் பெறுவதற்கு உதவக்கூடிய 'உழைப்பு'. இதிலே பங்குபெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே, பாடுபட்டு, கண்ணைப்போல் வளர்த்து வரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்று சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனத்திலே தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும் மறையும்-செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று, வளர்ந்தது. கள்ளங்கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும், ஏற்படும் பிரேமைபோல், அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம், பாசம் ஏற்பட்டுவிட்டது.

''இன்னும் ஒரு மாசத்திலே குலே தள்ளுமாப்பா?-கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

''இரண்டு மாசமாகும்டா கண்ணு!'' என்று செங்கோடன் பதில் அளிப்பான்.

''செவ்வாழை குலே தள்ளிற்று-செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலேயை பெருமையுடன்.

குலே முற்ற முற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும் அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும், ஓங்கி வளரலாயிற்று. ''எப்போது பழ



## தோழமை

"ஒருவரையொருவர் கண்டவுடன் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்பட வேண்டும்; பயன் கருதியல்ல-பாசாங்குக்கு அல்ல-அர்த்த மற்றதுமல்ல-கண்டதும் களிப்பு; நம்மைப் போல ஒருவன் என்ற நினைப்பில் இருந்து அந்தக் களிப்பு மலரவேண்டும். அஃதே தோழமை!"

—அண்ணா

மாகும்?''-என்று கேட்பாள் பெண். 'எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?' என்று கேட்பான் பையன், செங்கோடன் பக்குவமறிந்து குலையை வெட்டி பதமாகப் பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப்பலனை நாம் பெறப்போகிறோம்-இடையே தரகர் இல்லை?- முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணை யாருடையது-அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே நமக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ணவேண்டும்- அது தானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும், உடைமையும் செங்கோடனுக்குகே சொந்தம்!

இரண்டு நாட்களில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான்- பிள்ளைகள் துள்ளினர் சந்தோஷத்தால். மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது- பழம் தரவேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ 'அச்சாரம்' கொடுத்தனர், பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம். இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலே நாம் பாடுபடுவது நமக்குப் முழுப்பலன் அளிப்பதாக இருந்தால், எவ்வளவு எவ்வளவு இன்பமாக இருக்கும். செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது- ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால், பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது-எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது- இதுபோல், நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம்-பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா! என்றெல்லாம்கூட, இலேசாகச், செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனத்தில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

* * * *

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள்விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லி விட்டார். கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும்போது, 'பழம்' தேவை என்று தோன்றாமல் இருக்குமா? இரண்டு சீப்பு வாழைப்பழம் என்கிறார் பண்ணையார்.

''ஏனுங்க பழம்-கடையிலே நல்ல பழமே இல்லை-பச்சை நாடானாகத்தான் இருக்கு'' என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

''சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு இருந்தா வாங்கேன்?' வேறே நல்ல பழம் எங்கே இருக்கு என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், 'நம்ம செங்கோடன் கொல்லையிலே தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க-அதைக் கொண்டுகிட்டு வரலாம்'' என்றான். ''சரி'' என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு! குழந்தைகளின் குதூகலம்!!

அதற்கு மரண ஓலை தயாரித்து விட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து செங்கோடனின் குடும்பம் முழுதும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானன் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை, இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து!

தெருவிலே, சுந்தரமும், செங்கோடனும் பேசும்போது குழந்தை செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று- நாக்குக் குழறிற்று வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக்கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்குப் பிறந்த நாள் பூஜை-என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை அவன் குழந்தைகளின் நாக்கிலே நீர் ஊறச் செய்த ஆசை-இன்று, நாளை, என்று நாள் பார்த்துக்கொண்டிருந்த ஆவல்-எனும் எதைத் தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! 'எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை வாய்த் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டு அனுப்பினால், முடியாது என்று சொல்லி விட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு

நன்றிகெட்டதனமா? கேவலம் ஒரு வாழைக்குலை! அவருடைய அந்தஸ்துக்கு. ஒரு பிரமாதமா!'-என்று ஊர் ஏசுகிறதுபோல் அவன் கண்களுக்குத் தெரிகிறது.

'அப்பா! ஆசைகாட்டி மோசம் செய்யாதே! நான்கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன்-மாடு மிதித்திடாதபடி பாதுகாத்தேன்-செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும்; கல்கண்டு போல் இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும் போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லி விட்டு, இப்போது ஏமாற்றுகிறாயே, நாங்கள் என்னப்பா, உன்னை, கடையிலே காசு போட்டு திராட்சை, கமலாவா வாங்கித் தரச்சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்தல்லவா!'-என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும் அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ பண்ணை கணக்கப் பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். 'அப்பா, குலையை வெட்டப் போறாரு-செவ்வாழைக் குலை' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின; செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான்-உள்ளே கொண்டு வந்தான்-அரிவாளைக் கீழே போட்டான்-'குலையைக் கீழேவை அப்பா' தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். ''கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன்-அழாதீங்க இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கன்று மரமாகிக் குலை தள்ளும், அதை உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்'' என்று கூறிக் கொண்டே வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தைகளின் அழுகுரல், மனத்தைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்துக்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்கு வர! அழுது அலுத்துத் தூங்கி விட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று, துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான்-அவன் மனத்திலே ஆயிரம் எண்ணங்கள், செவ்வாழையை, செல்லப் பிள்ளை போல் வளர்த்து, என்ன பலன்..!

அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல-ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு..அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான்-எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள்-எத்





## இரவைப் பகலாக்கிக் கொண்டு எழுதும் ஆற்றல் பெற்றவர் !

உலகமெல்லாம் உறங்கிக் கொண்டிருக்கும்! ஆனால் அந்த உலகத்திற்கு அறிவு கொளுத்த வேண்டும் என்பதற்காக, விடிய விடிய கண் விழித்திருந்து—உடலைக்கெடுத்துக் கொண்டு—எழுதிக் குவித்த அறிஞர்கள் உலகில் ஒரு சிலரே! அத்தகைய அறிஞர் பெருமக்களில் பண்டித நேரு அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் குறிப்பிடத் தகுந்தவர்கள் என்றால் மிகையாகாது.

1968 செப்டம்பர் 8-ஆம் நாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையை அண்ணா நிகழ்த்தினார். அன்று அவர் ஆற்றிய உரை புத்தறிவுப் பேருரை ; கருத்துக் கருவூலம்!

அவ்வுரை அண்ணாவின் கைப்பட எழுதியது. கையெழுத்தில் சுமார் 120 பக்கங்கள். அண்ணாவே ஒரே மூச்சில் அந்த நீண்ட பொருள் செறிந்த உரையினைத் தயாரித்து விட்டார்.

இரவு பன்னிரண்டு மணி அளவில் அண்ணா உரையை எழுதத் தொடங்கினார். அவர் அதை எழுதி முடித்த பொழுது காலை 5 மணி! ஒரே மூச்சில், தொடர்ந்து இரவு பூராவும் உட்கார்ந்து தன் கைப்படவே அப் பேருரையை எழுதி முடித்தார் அண்ணா!

தனை ஆயிரம் தடவைகள், குழந்தைகளுக்கு ஆசைகாட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கறை எத்தனை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!!

* * *

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே, ஒரு சீப்பு செவ்வாழைப் பழத்தை வைத்துக் கொண்டு, அன்ன நடை நடந்து அழகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றாள்.

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான். ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங் கலயத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள். பழம் வாங்கிக் கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே, செவ்வாழைச் சீப்பு, அழகாகத்தொங்கிக்கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பு முதலிலேயே எடுத்து வந்து விட்டான்-அவன் விற்றான் கடைக்காரனுக்கு-அதன் எதிரே ஏக்கத்துடன் நின்றான் கரியன்! ''பழம், ஒரு அணாடா, பயலே-காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமோ-போடா! என்று விரட்டினான் கடைக்காரன்..கரியன் அறிவானா பாவம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாவம்! எத்தனையோ நாட்கள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான் பழம் கிடைக்கும் என்று! பழம் இருக்கிறது, கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டுக்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொறித்துக் கொண்டே. செங்கோடன் கொல்லைப்புறத்திலிருந்து வெளியே வந்தான்-வாழை மரத் துண்டுடன்.

''ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?'' என்று கேட்டான் கரியன்.

''இல்லேடா, கண்ணு! நம்ம பார்வதிப் பாட்டி செத்துப் போயிட்டா-அந்தப் பாடையிலே கட்ட'' என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான், ''எங்க வீட்டுச் செவ்வாழைடா!' என்று.

''எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்துட்டோம்?- மரத்தை வெட்டிப் பாடையிலே கட்டிவிட்டோம்'' என்றான் கரியன்.

பாவம்! சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வசாதாரணச் சம்பவம் என்பதை.....!

(நன்றி : 'கல்கி')



# மாணவ மணிகளுக்கு அண்ணா அளித்த அறிவுரை!



## வைரமாகத் திகழுங்கள்!

"மாணவர்கள் வைரங்களாக இருக்க வேண்டும் வைரத்திற்கு அதிக மதிப்பு இருப்பதற்கு ஒரு காரணம், பூமியின் வெகு ஆழத்தில் அது இருப்பதே ஆகும்!

"நிலத்தின் கீழே தோண்டினால், சுண்ணாம்பு கிடைக்கும் - நிலக்கரி கிடைக்கும்; அதற்கும் கீழே அழுத்தி வைக்கப்பட்டுள்ள வைரத்திற்கு தான் மதிப்பு இருக்கிறது!

"அதைப்போலவே, மாணவர்களும் தங்கள் இளமைப் பருவத்தை, 'அரசியல் கிளர்ச்சி' என்று ஈடுபடாமல் அழுத்தி வைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

"மாணவர்கள், தங்கள் இளமைப் பருவத்தை அழுத்தி வைக்க வேண்டுமென்று கூறினனே தவிர, 'அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடாது' என்று சொன்னேனே தவிர - அரசியலில் அக்கறை செலுத்தக்கூடாது என்று கூறவில்லை.

"கல்லூரியை விட்டு வெளியே வந்த பின்னர்தான், 'இந்த நாட்டின் தலைமையமைச்சர் யார்?' என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை!

"இப்போதைய பருவம் - கிடைத்தற்கரிய பருவம்; தேடிப் பெறுகின்ற கல்விச் செல்வத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; மாணவப் பருவத்தை அழுத்தி வைத்து, வைரமாகத் திகழுங்கள்!

"இப்பொழுது நீங்கள் பெறுகின்ற கல்வி உங்களுக்காக மட்டுமல்ல - சமுதாயத்திற்காகக் கல்வி பெறுகின்றீர்கள் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்!"

## புனிதப் பணியில் மாணவர் ஈடுபட வேண்டும்!

"கண்ணியமிக்க பரம்பரையின் வழித்தோன்றல்களாகிய மாணவர்கள் இந்தச் சமுதாயத்தை வளப்படுத்தும் பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் அவர்கள் காணும் வெற்

றியில் தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

"புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை - குடிசையில் வாழும் சாமானிய மனிதனை - தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை - முன்னேற்றும் புனிதப் பணியில் மாணவர் சமுதாயம் ஈடுபட வேண்டுகிறேன்."

•• ••

## அறிவு புகட்ட வேண்டும்!

"சமுதாயத்திற்கு உழைக்கவேண்டும் என்று ஆர்வத்திலுள்ள மாணவர்கள், கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பாமர மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்."

** **

## சிறந்த ஆசான்!

"மாணவர்களின் மனவளம் அவர்களின் குடும்ப வளத்தையே பெரிதும் பொறுத்திருக்கிறது. கல்வியில் நாட்டம் பிறக்கவும், அதில் ஆர்வம் வளரவும் சுற்றுச் சார்பைவிடச் சிறந்த ஆசான் வேறு இருக்க முடியாது."

** **

"வாழப் பிறந்தோம், அதற்கேற்ப வையகத்தை மாற்றி அமைப்போம்; அவரவர் தத்தமக்குக் கிடைத்திடும் வாய்ப்புக்கு ஏற்ப, அந்தப் பொது நோக்கம் வெற்றி பெறப் பணியாற்ற வேண்டும்."

** **

## அறிவுத்தூதர்களாக விளங்க வேண்டும்!

"பகுத்தறிவுப் பிரச்சாரம் கடினமானதுதான்! ஆனால், வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களைவிட, வேறு யாரும் இப்பணிக்கு லாயக்கு இல்லை. மாணவர்களே, கிராமாந்திரத்திலுள்ள மக்களிடம் அறிவு எடுத்துச் சொல்லுகிற தூதுவர்களாக விளங்க வேண்டும்."

** **

## ஆராயும் அறிவு வேண்டும்!

"எத்தகைய கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. மாணவமணிகளாகிய உங்களுக்கு ஆராயும் அறிவு வேண்டும். நீங்கள் அனைவரும் புத்துலகச் சிற்பிகளாக வேண்டும். உங்களிடத்தில் தீரமும், திறமும் இருந்தால் மட்டும் போதாது. இத்துடன் அறிவு ஆராய்ச்சிகளும் தேவை. அதை அறிவுத் தெளிவோடு ஆராய்ந்து, இது சரி, இது தவறு என்று முடிவு கட்டும் மனப்பான்மை உங்களுக்கு வேண்டும். இதோடு திட்டவட்டமான கொள்கையும், பெருநோக்கும் உங்களுக்கு இருக்க வேண்டும்."

•• ••

## சிறந்த புத்தகம்

"எல்லாப் புத்தகங்களையும்விட சிறந்த புத்தகம் இந்த பரந்த உலகம்தான்; உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

## உங்களால் முடியும்!

"மாணவர்களாகிய உங்களிடம் கைவிடப்பட்ட 'கேஸ்' ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மனிதனை மனிதனுக்க—மனிதனிடமிருந்து மிருகத் தன்மையைப் பிரிக்க—மக்களிடத்திலே மனவளத்தை உண்டாக்க—நீங்கள் பாடுபட வேண்டும். மூட நம்பிக்கையுள்ள மக்களைத் திருத்த டாக்டர்களால் முடியாது; உங்களால் முடியும்."

## மாணவர்கள் காட்டவேண்டிய நன்றி!

"முழு வயிறு காணுதார், முதுகெலும்பு முறியப்பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணுர், வலியோரின் பகடைக்காய்கள், ஓடப்பர் — இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய், கொடிமரமாய், பாதையாய், பகட்டுக்களாய், அமல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

"வியர்வை பணமாகிறது — வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிகள் வரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை — எத்தனை ஏழ்மை இடையில் இந்நாட்டு மக்கள், தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றனர் என்பதனை - மாணவர் உணர்ந்திடின் அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும். ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே இத்தனையும் தந்திடும் ஏழை மக்களுக்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்று அறிவர்."

—அண்ணு

# நாடகத்திலும் திரைப்படத்திலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் அண்ணா!



தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளை உடையது. அதனால்தான் நமது தாய்மொழி முத்தமிழ் என்று சிறப்பிக்கப்படுகிறது.

ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்மொழிக்கு இசை ஏது? தமிழ்மொழியில் நாடகம் ஏது? என்று கேட்பவர்கள் பலர் இருந்து வந்தார்கள்.

படிப்படியாக இந்த நிலைமை மாறி வந்தது.

அண்ணாமலை அரசருடைய பெரு முயற்சியால் தமிழிசை வளர்ந்தது. அதேபோல் நாடகத் தமிழ், அண்ணாவால் வளர்ந்தது என்று சொல்லுபடியாக அவர் பல புதுமைகளைச் செய்தார்.

அந்த நாளிலெல்லாம் நாடகம் என்றால் 'கிருஷ்ணலீலா', 'தசாவதாரம்', 'இராமபக்தி' போன்ற நாடகங்கள்தான் நடந்து வந்தன இவற்றை விட்டால் 'கோவலன்', 'பவளக்கொடி', 'வள்ளித் திருமணம்' போன்ற நாடகங்கள் நடந்து வந்தன.

1920-ஆம் ஆண்டில் "ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியார்" ஓரளவு நாடகத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அதன்பிறகு காங்கிரஸ்காரரான திரு பி. கிருஷ்ணசாமி என்பவர் பிரசாரத்திற்காகச் சில நாடகங்களை நடத்தினார்.

ஆயினும் நாடகத்துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏதும் ஏற்படாமலே இருந்து வந்தன.

நாடகத்தின் மூலம் புரட்சிகரமான பல கருத்துக்களை மக்கள் ஒப்புக்கொள்ளும்படிச் சொல்ல முடியும் என்று அண்ணா நீண்ட காலமாக எண்ணி வந்தார்; சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டு வந்தார்.

தம்முடைய நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள அவரே நாடகங்கள் எழுதத் தொடங்கினார்.

1943-ஆம் ஆண்டு அண்ணா 'சந்திரோதயம்' என்னும் நாடகத்தினை அரங்கேற்றினார்.

அடுத்து, 'சந்திரமோகன்' என்ற நாடகத்தை அண்ணா அரங்கேற்றினார். 'சந்திரமோகன்' என்ற நாடகம் நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

வீர சிவாஜியின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அண்ணா அந்த நாடகத்தை எழுதி இருந்தார். அதோடு அந்த நாடகத்தில் 'காகபட்டர்' என்ற பாத்திரத்தை ஏற்று நடித்து வந்தார்.



அண்ணா வருகிற ஒவ்வொரு காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகும். கருத்தைக் கவர்ந்து சிரிக்க வைக்கும் காட்சியாகும்.

சந்திரமோகன் நாடகத்தின் மூலம் நாடகத்துறையிலும் பிரசாரத்துறையிலும் அண்ணா பெரிய மாற்றத்தை உண்டாக்கினார்.

இந்த நாடகத்தைத் தொடர்ந்து 'வேலைக்காரி', 'ஓர் இரவு' என்ற இரு கருத்தோவியங்களை அண்ணா நாடகமாக்கினார்.

அந்த இரு நாடகங்களையும் கே. ஆர். இராமசாமி அவர்கள் தஞ்சை மாநகரில் நாடகமாக அரங்கேற்றினார்.

ஒவ்வொரு நாடகமும் ஐம்பது வாரங்கள் தொடர்ந்து நடந்து நாடக உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின!

அந்த இரு நாடகங்களையும் தமிழ் நாட்டில் உள்ள எல்லா அறிஞர்களும் பார்த்தார்கள்.

அண்ணாவின் திறமை கண்டு வியப்படைந்தார்கள்.

இந்த இரு நாடகங்களுமே பிறகு திரைப்படங்களாக உருவாக்கப்பட்டன.

இவற்றில் 'வேலைக்காரி' நாடு எங்கும் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்று சொல்லலாம். அண்ணாவின் தேன்மொழி வசனம், தமிழ் மக்களுக்குப் பெரும் புதுமையாக இருந்தது.

அந்தத் திரைப்படத்திலே வந்த சீர்திருத்தக் கருத்துக்கள்



பழமையை விரும்புகிறவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. புதுமையை விரும்புகிறவர்களுக்குத்-தேனாக பாலாக-இனித்தது.

'வேலைக்காரி' திரைப்படம் வெளிவந்தபோது நாட்டிலே சிலர் பெரும் எதிர்ப்பைக் கிளப்பினார்கள். தடைசெய்ய வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் முதலிலே அந்தப் படத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதும் தவறாக நினைத்த பல பெரியவர்கள் படத்தைப் பார்த்ததும் வாயாரப் புகழ்ந்தார்கள். இவரல்லவா அறிஞர் என்று பாராட்டினார்கள்.

அண்ணா திரைப்படங்களுக்கு வசனம் எழுதிய பிறகு தமிழ் நாட்டுத் திரைப்படத் துறையில் வசனம் எழுதுபவர்களும் மதிக்கப்பட்டார்கள்.

பெரும் காவிய ஆசிரியர்கள் பாராட்டுப் பெறுவது போல அண்ணா பாராட்டப்பட்டார்.

அண்ணாவின் நாடகங்கள் அரங்கேற்றப்பட்ட பிறகு. அவை திரைப்படமாக ஆன பிறகு நாட்டு மக்களிடம் இருந்த மூட நம்பிக்கை வெகுவாகக் குறைந்தது.

அண்ணா நாட்டு மக்களுக்கு நல்ல தலைவராக விளங்குவதோடு நாடறிந்த கலைஞராகவும் விளங்கினார்!

**

## கலைத்துறையின் முக்கியத்துவம்!

"கலைத்துறையின் மூலம் சீரிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன் நான். முற்போக்கு நாடுகளெல்லாம் இதில் நம்பிக்கை வைத்திருக்கின்றன. இது ஒரு தொழில், வருமானம் பெறும் சாதனம் என்றில்லாமல், நாட்டுக்கு நற்கருத்துக்களைத் தரும் சிறந்த துறையுமாகும்."

—அண்ணா.

## பெண் கல்வி வேண்டும்!

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது, படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு, முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும், சந்ததிகள் வாழ்க்கை சீர்பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

— அண்ணா

## கல்வியின் தன்மை

வாலிப உணர்ச்சிகள் வேகமாக நடைபோடுவது. இயற்கையிலேயே இது உருவானது என்றாலும் அதிகமான வேகம் நீடித்த தன்மையினதாக இருக்காது என்று சொல்லுவார்கள். மாணவர்களிடையே வேகம் தேவைதான். அது ஏற்படுவது இயற்கைதான் என்றாலும், அந்த வேகம் வகைப்படுத்தப்பட வேண்டும். கல்வியின் வேகம் முறைப்படுத்தப்பட வேண்டும். கல்வியின் தன்மையே வேகத்தை முறைப்படுத்தி வகைப்படுத்துவதுதான்.

— அண்ணா

## தொழிலாளர்களும் கல்வி கற்க வேண்டும்!

"நமது நாட்டில் ஒரு கெட்ட பழக்கம் —படிப்பவன் வேலை செய்ய மாட்டான். வேலை செய்பவன் படிக்க மாட்டான். ஆனால் இந்த நிலை மெள்ள மெள்ள மாறி, தொழிலாளர்கள் தங்கள் வேலை நேரம் போக, ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த்துக் கொண்டாக வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது, அவர்கள் தொழிலுக்கே பயன்படும்.

அதோடு கூட, மற்ற பொது அறிவைப் பெறுவது நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால், அளவுக்கு மீறிய கோரிக்கைகளை எழுப்ப மாட்டார்கள். "நாம் கேட்டால் கூட, அவர்கள் எங்கிருந்து தருவார்கள்?" என்பது தெரிந்து விட்டால், கேட்கவே மாட்டார்கள்."

—அண்ணா

*(25—6—1967 அன்று அரசு அச்சக ஊழியர் கூட்டத்தில் பேசியது.)*



# முதலமைச்சர் அண்ணா
## (படமும் செய்தியும்)

முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், அரசின் ஆணைகளோ, நடவடிக்கைகளோ, திட்டங்களோ ஏழை, எளிய, பாமர, பாட்டாளி, தொழிலாளி மக்களுக்கு நன்மை செய்வதற்காக இருக்கவேண்டுமே தவிர எள்ளத்தனை தீமையும் விளைவிக்கக்கூடாது என்பதற்காக, கோப்புக்களைத் துருவித் துருவிப் பார்த்தார்.





அன்றைய ஆளுநர் திரு உஜ்ஜல்சிங் அவர்களிடம் அண்ணா பரிசுச் சீட்டு விற்பனை செய்கிறார். (15-8-1968).

## பரிசுச் சீட்டுத் திட்டம் ஏன் ?

''அரசாங்கம் செய்து தர வேண்டிய வசதிகளுக்கு ஏற்ற வகையில், வரி வருவாய் பெருகவில்லை. புதிதாக வரி போட்டால், தாங்கும் நிலையில் மக்கள் இல்லை. வரி வருவாய் கிடைக்கவில்லை என்பதற்காக, மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க மறுப்பது, சமூக நீதியாகாது. எனவேதான், கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளைப் பெருக்குவதற்காக, பரிசுச் சீட்டுத் திட்டம் போன்ற நல்ல காரியங்களைச் செய்து வருகிறோம்.''

—அண்ணா

நாளைய தலைமுறை நல்லதாக அமைய, புத்தகங்களையும், சிலேட்டையும் இலவசமாக அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார் அண்ணா. (4-8-1967)






ஆச்சாரியா துளசியுடன் அண்ணா.

"அண்ணனும் தம்பியுமாகச் செயல்படு கிறோம்!'' என்று அன்றைய ஆளுநர் திரு உஜ்ஜல்சிங் அடிக்கடி கூறிவந்தார். அந்தப் பெருமிதம் ஆளுநர் முகத்திலும், அண்ணா முகத்திலும், தெரிவதைக் காணலாம்!







தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைத்து ஒப்புதல் பெறுவதற்காக, நிதிநிலை அறிக்கையுடன் சட்டமன்றப் பேரவை நோக்கிப் பேரறிஞர் அண்ணா வருகிறார் (17-6-1968).

மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன் பேரறிஞர் அண்ணா.






இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் வரலாற்றுப் புகழ்மிக்க ஊர்வலத்தைக் கண்டுகளிக்கும் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன், தமிழக ஆளுநர் திரு உஜ்ஜல்சிங் ஆகியோருடன் அண்ணா! (3-1-1968).

திரு மொரார்ஜி தேசாய் அவர்களுடன் அண்ணா.





பெருந்தலைவரும் பேரறிஞர் அண்ணாவும்.

ஜெகஜீவன்ராம் அவர்களுடன் அண்ணா.






யேல் பல்கலைக் கழகத்தின் வரலாறு கூறும் நூலினைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேரார்வத்துடன் படிக்கிறார்.

யேல் பல்கலைக் கழகத்தில், அமெரிக்க மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்துகிறார் பேரறிஞர் அண்ணா.





## "எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தலைவர் நீங்கள்!"

திருப்பதியில் 1969—ஆம் ஆண்டு சனவரியில் திரு. சஞ்சீவ ரெட்டி (தற்போதைய குடியரசுத் தலைவர்) அவர்களின் மகன் திருமணம். அண்ணாவுக்கு அழைப்பிதழ் கொடுத்து நேரில் அழைக்க வந்தார் சஞ்சீவ ரெட்டி. அண்ணா நோய்வாய்ப்பட்டிருந்த நேரம்.

**" அண்ணா.......இந்த நிலையில் தாங்கள் நேரில் திருமணத்திற்கு வரவேண்டுமென நான் கேட்கமாட்டேன். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாழ வேண்டும். இந்த நாட்டிற்கு– சிறப்பாகத் தென்னகத்திற்கு உங்கள் உழைப்பு, பணி எல்லாம் மிக மிகத் தேவையானது"** என்று நெக்குருகக் கூறிவிட்டு, அண்ணாவிடம் விடை பெற்றுக் கொண்டார்.

போவதற்கு முன்னால் திரு. சஞ்சீவ ரெட்டி சொன்ன வார்த்தைகள் :

**"—நீங்கள் நெடு நாள் வாழ வேண்டும். அரசியல் வேறுபாடுகள் எவ்வளவுதான் இருந்தாலும், இந்த நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும் தலைவர் நீங்கள்......"**



## "தலைப்பில்லை!", ஆனால்!

**சென்னை கல்லூரி ஒன்றில் ஒருமுறை** அண்ணா பேச எழுந்தபோது என்ன பேச **வேண்டும் என்று கேட்டார்.**

'தலைப்பில்லை' என்றார்கள்.

இன்னொரு சமயம் கோகலே மண்டபத்தில் கல்லூரிகள் தமிழ்ப் பேரவை சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திருமதி சௌந்தரம் கைலாசம், திரு. டி. கே. சண்முகம் முதலியோர் தமிழின் சிறப்பைப் பற்றியும், இனிமையைப் பற்றியும் எடுத்துரைத்தனர். இறுதியில் பேசிய அண்ணாவுக்குத் தலைப்புத் தரப்படவில்லை.

ஆகவே அண்ணா, "முன்னால் பேசியவர்கள் தமிழின் மாண்பினையும் சிறப்பையும் எடுத்துரைத்தார்கள். இதற்கு முடிவு கூறவேண்டும் என்றால், 'ஆனால்' என்றுதான் தொடங்க வேண்டும்" என்று கூறி "ஆனால்" என்ற தலைப்பில் பேசினார்கள்! *

### மேடைப்பேச்சு

"பேசுபவரின் கருத்துப் பயன் தருமாயின், கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே, மேடைப் பேச்சுக்குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படி செய்வது, மிகமிக முக்கியம். பூத்த மலரை அழகுற தொகுத்தல் போல, கிடைத்தக் கருத்தைத் தொகுத்தும், வகுத்தும், பிரித்தும், வெல்லும் சொல் தெளிவான நடை, நம்பிக்கையூட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைத்தல் வேண்டும்."

—அண்ணா

# வருமானமல்ல! குடும்பங்களின் மகிழ்ச்சிதான் அரசுக்கு முக்கியம்!

— அண்ணா

"மதுவிலக்கு, ஒரு வாழ்க்கை முறை; அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டோம்; மாநில அரசின் அமைப்பு எவ்வாறு இருந்தாலும், மது விலக்குக் கொள்கை தொடர்ந்து அமுலாக் கப்படும்."

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங் களுக்கும், விவசாயத் தொழிலாளர் களுக்கும் விமோசனமில்லை."

"சென்னையில் ஒரு பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு மதுவைப் பற்றி ஒன்றுமே தெரியாது. குடித்துவிட்டு வீதி களில் ரகளை செய்யும் காட்சிகளையும் அவர்கள் கண்டதில்லை."

"மதுவிலக்குக் காரணமாக, 'குடித்து விட்டு ரகளை செய்வதை'க் காணாத புதிய தலைமுறையை இப்போது நாம் காண்கிறோம்! 'ஒரு சிலர் திருட்டித்தனமாகக் குடிக்கிறார் கள்' என்பதற்காக—'ஒரு சிலர் மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிறார்கள்' என்பதற்காக எந்த நாகரிக அரசும் மதுவிலக்குத் திட்டத்தை எடுத்துவிடாது!

"மதுவிலக்குச் சட்ட மீறல் குற்றங்களைப் பார்த்து, 'அந்தத் திட்டம் தோல்வியடைந்து விட்டது; ஆகவே, ரத்து செய்துவிட வேண் டும்' என்றால் ஏற்றுக்கொள்ள இயலாது; 'இன்னும் வலுவான முறையில் மதுவிலக்குத் திட்டம் அமல் செய்யப்பட வேண்டும்' என்ப தன் அவசியத்தையே அது வற்புறுத்துகிறது!

"இன்று காலை கூட பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகி இருப்பதைப் படித்தேன். மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் ரூ. 11 கோடி வருமானம் வரும் என்று ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். நிதிப் பற்றாக் குறையால் அவதியுறும் இந்த மாநிலத்தின் பொறுப்பை ஏற்றிருக்கும் எனக்குகூட, 'ரூ. 11 கோடி வருமானம்' என்பது மிகுந்த 'வசீகரமாகத்'தான் இருந்தது; ஆனால் அடுத்த நிமிடமே—மதுவிலக்கை ரத்து செய்து விடுவதன் விளைவாக... கண்ணீர் வடிக்கும் தாய்மார்களின் முகங்களும், அழுது கதறும் குழந்தைகளின் உருவங்களும், நலிந்தவிட்ட குடும்பங்களும் என்னுடைய மகக் கண்முன் காட்சியளித்தன; சிறிது நேரம் சிந்தித்தேன்; இந்த 'வசீகர'மான ரூ. 11 கோடிக்கு 'விடை கொடுத்து' விட்டேன்! அந்த ரூ. 11 கோடி வருமானத்தை விட தாய்மார்களின் மகிழ்ச்சி—திருந்திய குடும்பங்கள்தான் தமிழக அர சுக்கு முக்கியம்; 'இதற்கு எதிராக இந்த வருமானம், எந்த வகையிலும் ஈடல்ல' என்று முடிவு கட்டினேன்; ஆகவே, மது விலக்குச் சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை மூடி—திட்டத்தை இன்னும் உறுதியாக அமுலாக்கி—அத்துறையில் வெற்றி காண முனைவோம்."

(ஏப்ரல் 12, 1968—அன்று அனைத்துஇந்திய மதுவிலக்கு மாநாட்டில் பேசியது.)

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கோர் இலக்கணமாய்-எடுத்துக்காட்டாய்-திகழ்ந்த அண்ணா அவர்கள், அனைத்து இந்திய மது விலக்கு மாநாட்டில் மதுவின் கொடுமையை எடுத்துக்கூறி, மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிர [illegible] வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். (12.4.1968).



## எனக்குக் கை கூடாதது அண்ணாவுக்குக் கைகூடியது!...

"பிரசாரங்கள் நடத்துவதில் 'சந்திரோதயம்' போன்ற நாடகம் நடத்துவது மிக முதன்மையானதாகும். இதை நான் பத்து பன்னிரண்டு ஆண்டு காலமாகவே சிந்தித்து, சிந்தித்து ஒன்றும் சரியாய் கை கூடாமல், இப்போது தோழர் அண்ணாதுரை அவர்கள் துணிவோடு கிளம்பி, முகத்திற்குச் சாயம் பூசிக்கொண்டு மேடை ஏறிப் பாவலாப் போடவும், அதை ஒரே சமயத்தில் 5,000 மக்கள் பார்த்துக் களிக்கும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறதையும் பார்த்து நான் பெருமை அடையாமல் இருக்கமுடியவில்லை.

"உண்மையைச் சொல்வதானால், அண்ணாத்துரையின் சந்திரோதய நாடகம், அதைப் பார்த்த மக்களுக்கு வெகுஉணர்ச்சியாகவும், அறிவுக்கு நல்விருந்தாகவும், மானத்திற்கு உயர்தர வழிகாட்டியாகவும் -தொடக்கம் முதல் முடிவு வரை- விளங்குகிறது என்பது சிறிதும் மிகைபடக் கூறியதாக ஆகாது."

—பெரியார் ஈ. வே. ரா.





## பெரியாருக்கு அண்ணா அளித்த பரிசு!

". . .நெடுந்தொலைவு போன மகன், திரும்பத் தந்தையைப் பார்க்க வரும்போது கையில் கிடைத்ததை வாங்கி வந்து தருவான். அதேபோல, இன்று பெரியாரை பார்க்க வந்திருக்கிற நானும் ஓர் அன்புப் பரிசை—கனியை—ஏதோ என்னால் இயன்றதை—கொண்டு வந்திருக்கிறேன்.

"சுயமரியாதை இயக்கத் திருமணங்களை நடத்திச் சாதி ஒழிப்புக்காகப் பெரியார் பாடுபட்டு வருகிறார். பகுத்தறிவு திருமணங்களும், கலப்புத் திருமணங்களும் நாட்டில் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன.

"இந்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கிச் 'சுயமரியாதைத் திருமணச் சட்டம்' கொண்டு வரப் போகிறோம். என்ற நல்ல செய்தியை அன்புப் பரிசை—கனியை—பெரியாரிடம் அளிக்கிறேன்."

இவ்வாறு 7-6-67-ல் திருச்சி பெரியார் மாளிகையில் பொதுவுடைமைத் தலைவர் ப. சீவானந்தம் அவர்களுடைய புதல்வியின் திருமண விழாவிலேயே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

அதைக் கேட்டதும், பெரியாரின் உற்சாகம் கங்கு, கரையை யெல்லாம் உடைத்துக் கொண்டு பொங்கிப் பெருகியது! தம் பருத்த மேனி குலுங்கச் சிரித்து மகிழ்ந்துக் கை தட்டினார்.

பூரிப்பில் மிதந்த பெரியார் அவர்கள் "இதை அண்ணா அவர்களின் அருள்வாக்காகவே எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறி புகழ் மாலை சூட்டினார் அண்ணாவுக்கு!



# பெரியார் ஒரு சகாப்தம்!

— அண்ணா

இப்போது நான் உள்ள வயதில் அவர்
இருந்தார். நான் அவருடன் இணைந்தபோது
முப்பது ஆண்டுகளுக்கு முன்பு—அதற்கு முன்பு
முப்பதாண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்
கிறார்: இந்த 'ஆண்டுகள்' தமிழரின் வரலாற்
றிலே மிக முக்கியமான ஆண்டுகள். திடுக்கிட
வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே!
எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கி
றாரே! என்று கூறியும், விட்டு வைக்கக்
கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்டும்!
நானே தீர்த்துக் கட்டுகிறேன்! என்று மிரட்டி
யும் தமிழகத்திலுள்ளோரில் பலர் பேசினர். ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர். ஆனால் அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர்! மூலையில் நின்றாகிலும் மறைந்தாகிலும்! அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது! எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள் ஏனோ தானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர். கொதித்தவர்கள் அடங்கினர். மிரட்டினோர் பணிந்தனர். அலட்சியம் செய்தோர் அக்கறை காட்டினர். அவருடைய பேச்சோ, அது தங்கு தடையின்றி, வேகம் குறையாமல் பாய்ந்தோடி வந்தது. மலைகளைத் துளைத்துக் கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு, காடுகளை கழனி வளம் பெறச் செய்து கொண்டு, ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார்! இங்கே பேசுகிறார்! அதைக் குறித்துப் பேசுகிறார்! இதைக்குறித்துப் பேசுகிறார்! என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கூறி வருகிறது.

மனதிற் பட்டதை எடுத்துச் சொல்கிறேன்; எது நேரிடினும் என்ற உரிமைப்போர், அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை. இன்று அனைவரும் பெற்றுள்ளனர். அந்த வெற்றியின் விளைவுகளால், இந்த த்தமிழகத்தில் தூய்மையுடன், மனதிற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல் கட்ட வெற்றி இது! இதற்கு முழுக்க பொறுப்பாளர் பெரியார்! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரியது.

அவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத 'பழமை' உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எதற்கு அவர் பணிந்தார். எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பொறுத்தது! ஏ! அப்பா! ஒரே ஒருவர் அவர் நம்மை அச்சு வேறு ஆணி வேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே, என்று 'இந்நாட்டை என்றென்றும் விடப்போவதில்லை' என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த 'பழமை' அலறலாயிற்று! புதுப் புதுப் பொருள் கொடுத்தும்; பூச்சு மெருகு கொடுத்தும், இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. என்றாலும், விழுந்த அடியில் அடித்தளம் நொறுங்கிப் போய்விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இல்லை. எனவே தான், பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதரின் வரலாறு என்றல்ல;

**"ஒரு சகாப்தம்—ஒரு காலக் கட்டம்—ஒரு திருப்பம்" என்று கூறுவது வாடிக்கை.**

(பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரின் 89வது ஆண்டு பிறந்த நாள் 'விடுதலை' மலருக்குத் தந்த சிறப்புக் கட்டுரையின் பகுதி).

# பெரியாரால் பாராட்டப் பெற்ற அண்ணாவின் தலையங்கம்

'ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்ட வேண்டும்'—என்னும் கொள்கையை உடையவர். அவர் மிகப் பெரிய சிக்கனக்காரர் என்பதை நாடே அறியும். பணத்தைச் செல வழிப்பதில் மட்டுமல்ல; பிறரைப் பாராட்டுவ திலும் 'சிக்கனக்காரரே'!

அத்தகைய சிக்கனக்காரரே அண்ணாவின் எழுத்து வன்மையின் முன்னே 'ஊதாரி'யாக வும் மாறி நின்றார் என்றால் அது வியப்புக்குரி யதுதானே!

'நவயுகம்' என்னும் வார ஏட்டின் மூலம் முதன் முதலாகத் தமிழ் எழுத்துத் துறைக்கு அறிமுகமாயிருந்த அண்ணா, 1939ல் 'விடுதலை' ஏட்டின் துணையாசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

விடுதலையில் அவரது எழில் சொட்டும் தமிழ் நடை, குற்றாலத்து அருவியாகத் துடி துடிப்போடு கொட்டிப் பாய்ந்தது! கருத்துச் செறிவோ, குனிந்து ஒடுங்கிய மக்களை யெல் லாம் நிமிர்ந்து நடக்கத் தூண்டியது! 'பரதன்'—'வீரன்'—என்னும் கற்பனைப் பாத்திரங்களை உருவாக்கி அவற்றின் வாயிலாக அவர் எழுப்பிய அரசியல்—பகுத்தறிவு—வாதங்கள் அற்புதமாய் அமைந்திருந்தன! அனைவர் உள்ளங்களையும் கவர்ந்திழுத்தன!

அவருடைய விறுவிறுப்பான தலையங்கங் கள் மாற்றார் மீது குறி தவறாத கணைகளாக—பொறி பறக்கும் தீப் பிழம்பாக—யாவரை யுமே திகைக்க வைத்தன!

'விடுதலை'யின் துணை ஆசிரியரான அண்ணா அவர்கள், பெரியார் வீட்டில்தான் தங்கியிருந் தார். அந்த வீடு மூன்று அடுக்கு மாடிகளைக் கொண்டது. கடைசி மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகளோ மிகவும் குறுகலானவை. செங்குத்தானவை; பெரியாரைப் போல் கடின மான உடம்பும், முதுமையும் பூண்டவர்கள் அவற்றின் வழியே ஏறிச் செல்வது என்பது மிகவும் கடினம்.

ஆனால் அண்ணாவோ அந்த மூன்றாவது மாடியில்தான் மாலைப் பொழுதைக் கழிப்பது வழக்கம். அப்படித்தான் ஒரு நாள் மாலை, மூன்றாவது மாடியில் அமர்ந்து அவர் ஏதோ படித்துக் கொண்டிருந்தார்.

அப்போது ஏறமுடியாத படிக்கட்டுகளில், தட்டுத் தடுமாறி ஏறியவாறே அண்ணா அவர் கள் இருந்த மூன்றாவது மாடிக்கு வந்துவிட் டார் பெரியார். அவர் அங்கு வந்ததைக் கண்டு திகைப்பில் ஆழ்ந்த அண்ணா,

''இவ்வளவு சிரமத்தோடு, ஏனய்யா இந்தப் படிக்கட்டுகளில் ஏறி மேலே வரவேண் டும்? கூப்பிட்டிருந்தால் நானே கீழே வந்திருப் பேனே?'' என்று கேட்டார்.

அதற்கு,

''நீங்கள் எழுதின 'ரிப்பன் கட்டிடத்துச் சீமான்கள்'—என்ற தலையங்கத்தைப் படித் தேன்? ரொம்பப் பிரமாதமாக இருக்கிறது'' என்று பாராட்டினாராம் பெரியார்.

''இந்தப் பாராட்டுக்கு இப்போது என்ன அவசரம்? நான் கீழே இறங்கி வந்தபின், எப்பொழுது வேண்டுமானாலும் பாராட்ட லாமே'' என்று அண்ணா சொல்லியிக்கிறார்.

**''அது இல்லை அண்ணாதுரை! பொதுவாக நான் யாரையும் பாராட்டுகின்ற பழக்கம் கொண் டவன் அல்ல! ஆனால் உங்கள் தலையங்கத் தைப் படித்ததும் உடனே பாராட்ட வேண்டும் என்று தோன்றியது. உடனடியாக என் விருப் பத்தை நிறைவேற்றவில்லையானால், அந்த எண்ணம் மறுகணமே மாறினாலும் மாறிவிடும். அதனால்தான் மேல் மாடிக்கு ஓடி வந்தேன்,''** என்று மனந்திறந்து கூறினாராம் பெரியார்.

# போனால் வராது!

அண்ணா அவர்கள் கிட்டத் தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வழியாகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஓர் ஊரில் நடக்க விருந்த நாடகத்தில் கலந்து கொள்வதற்காக உந்து வண்டியில் சென்று கொண்டிருந்தார்.

அண்ணா பேசுவதை அறிந்த கலைவாணர் காரோட்டியை நிறுத்தும்படியாகக் கூறினார். கலைவாணருடன் வந்த ஒருவர் 'ஏன் நிறுத்தச் சொல்கிறீர்கள்?' என்றார். அதற்குக் கலைவாணர் அண்ணா 'பேசிக் கொண்டிருக் கிறார்; கேட்டு விட்டுப் போகலாம்' என்றார்.

உடனே அந்த ஆள் சொன்னார் ''அண்ணா பேச்சைத்தான் பல தடவை கேட்டிருக்கிறீர் களே! அதுவும் சென்னையிலே அடிக்கடி கேட்டுக் கொள்ளலாமே, நமக்கு நாடகத்திற்கு நேரமாகிறது. ஆகவே புறப்படுவோமே'' என்றார்.

அப்போது கலைவாணர் சட்[illegible]ன்று சொன்னார்:

**''அண்ணா பேச்சு ஒவ்வொரு கூட்டத் திலும் புதுமையாக இருக்கும்; ஆகவே இப் போது கேட்காவிட்டால், இனிமேல் வேறு பேச்சுத்தான் கேட்க முடியும், போனால் வராத சரக்கு—புதுச்சரக்கு அண்ணாவின் பேச்சு!** என்று கூறி, அண்ணாவின் பேச்சைக் கேட்ட பிறகே நாடகத்திற்குச் சென்றார்.



# மக்கள் கவிஞர்

— அண்ணா



"மக்கள் கவிஞர்! மனங்கவரும் மகத்தான இந்தப் பட்டம் கவிஞனுக்கு மட்டும் வழங்கப்படும் புகழ்மாலை அல்ல. மக்களுக்கும் அளிக்கப்படும் மாபெரும் பேறுதான். காரணம் மக்களிடையே மன்னர்கள், மந்திரிகள், போர் வீரர்கள், போதகர்கள், சாமியார்கள், சந்நியாசிகள், சித்து புருஷர்கள், பூசாரிகள் இருந்தார்கள்; கவிஞன் இல்லை. பன்னூறு காலமதாய் பாரிலே கவிஞர்கள் உலவி வந்தார்கள்; அளவுக்கு அதிகமாகவே உலவி வந்தார்கள். ஆனால் அவர்கள் செய்து வந்த வேலையெல்லாம் வேதங்களுக்கு விரிவுரை, வியாக்கியானப் பாடல்கள் தீட்டுவது, படாடோப அரண்மனை வாழ்விற்குத் தங்கள் கவிதைத் திறத்தால் பகட்டுப் பூச்சு பூசுவது ஆகியவைதான்.

"மக்களுக்காக, மக்களைப் பற்றி, மக்களிடையே பழகு மொழியில் கவிதை இயற்றிய கவிஞன் மிக மிக அருமை!

"கவிஞனின் குரல், கோவில் கண்டாமணி செய்ய வேண்டியவேலையைச் செய்வதாகவோ, அரண்மனை முரசங்கள் அறைந்து அறிவிக்கும் ஒலியை பரப்புவதாகவோதான் இருந்தது.

"மக்கள் மனதுள் உறையும் எண்ணத் துடிப்புக்களை, சிந்தனையில் குமிழிடும் சீரிய கருத்துக்களை எழுத்து வடிவிலோ, ஒலி உருவிலோ எடுத்து இயம்புவதாய் இல்லை.

"தப்பித் தவறி கவிஞன் மக்களோடு பேசத் தொடங்கினால் அப் பேச்சு இந்த உலக மக்கள் எவ்வளவு பேராசை பிடித்தவர்களாக, இகலோக இச்சை நிறைந்தவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட—உலகம் எவ்வளவு நிலையற்ற தன்மையது, எத்தகைய மாயையின் சொரூபம் என்பதை விளக்குவதற்காக—வெள்ளி பாவத்தின் கறை, தங்கம் பைசாசத் தன்மையின் பிரதிபலிப்பு என்கிற மாதிரியிலே போதனைகள் உதிர்ப்பதற்காகத் தானிருக்கும்.

"அரச தண்டம், பணக்கார வர்க்கத்தின் சவுக்கு ஆகியவற்றிற்குப் பதிலாகப் பயன்படும் கருவியாக கவிஞனின் குரல் மிளிர்ந்தது.



எட்டையபுரத்தில் உள்ள மகாகவி பாரதியாரின் இல்லம்

அரச பரிவாரத்திலே மற்றுமொரு இன்றியமையாத அங்கமாக—இகத்திலே குற்றப்பத்திரிகை படித்து, பரலோக விசாரணை மண்டபத்தில் உரிய தண்டனையைப் பெற இழுத்து நிறுத்தும் போலீஸ்காரனாக—ஆகிவிட்டான் கவிஞன்!

“அத்தகைய கவிஞர்கள் மக்களுக்குப் புரியாத, அவர்களுக்கு முற்றிலும், புதியதான மொழியிலேதான் பேசினார்கள். தங்கள் குலமான மக்கள் குலத்தை வெறுத்து ஒதுக்கி விட்டு, தங்கள் மேதையையும், திறமையையும் அரண்மனைப் புறங்களிலே உலவி வர அனுமதி பெறும் சாதனங்களாகப் பயன்படுத்தினார்கள். அங்கே நுழைந்ததும் மன்னர் புகழ் குறித்துப் பாமாலைகள் பாடினார்கள். மன்னன் எத்தகையோனாயிருந்தாலும் கவலையில்லை. அவன் விட்டெறியும் பொன் காசு, பசும் பொன்னாலானதாயிருந்தால் போதும் என்பதே அவர்கள் குறி.

“வேதனை விளைவிக்கும் இந்த விதிக்கு விலக்காய் விளங்கியவர்கள் சங்க காலப் புலவர்கள். ஆனால் அவர்களைப் பற்றி இன்றைய நம்மவர்கள் அறிந்தது மிகவும் கொஞ்சமே.

“ஒழுக்கங்களின் சுமைதாங்கிகளாய் விளங்கிய புலவர்கள் பாடல்களைப் பாடிப் பணம் பண்ணும் வியாபாரிகளாகவோ அல்லது இன்பரசப் பாடல்களை ஏலங் கூறுபவர்களாகவோ மாறினார்கள்.

“மக்களின் கவிஞராக மாறுவது கடினம், அதோடு அது இலாபகரமான தொழிலும் அல்ல என எண்ணினார்கள். அதனால்தான் சங்க காலத்திற்குப் பின்பு பிரசித்தி பெற்ற மக்கள் கவிஞராகத் திகழ்ந்த யாரையும் காண முடியவில்லை!

## பழங்காலப் புலவர்கள்

“பரலோக இன்பம் கிட்டுவதற்காகச் சேர்த்து வைக்கும் சேமிப்புகளே ஒழுக்க முறைகள் என்ற கருத்துப் பரவியது. இந்த நாசகாரக் கருத்து வேரூன்றிய காலத்திற்குப் பின் முளைத்த கவிஞர்கள் இகலோக இன்பங்களைப் பரலோகப் பரமானந்த வாழ்விற்காகத் துறக்கத் தூண்டும் கங்காணிகளாகத் தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டுச் செயலாற்றினார்கள்.

“புத்திசாலியான பேங்க் முதலாளியைப் போல, சுறுசுறுப்பாக வேலை செய்யும் இன்ஷூரன்ஸ் ஏஜண்ட் மாதிரி பரலோக பாங்கியின் பந்தோபஸ்தான முதல்பலம் பற்றி, நிகழ்கால இன்பத்துறவுப் பாலிஸி பிரீமியம்கள் மூலம் கிடைக்கப்போகும் எதிர்காலப் பரலோக இன்ஷூரன்ஸ் இன்பத் தொகை பற்றி எல்லாம் உரக்கப் பிரசாரம் செய்தார்கள்.

“மனித வாழ்வின் பயனற்ற தன்மை குறித்து எடுத்துச் சொல்லி, இகலோக இன்பங்களைத் துறக்கத் தூண்டினார்கள். மேக மண்டலத்திற்கு மேலே, எங்கோ எவர் கண்ணிலும் படாதிருக்கும் சுவர்க்க பூமியின் பெருமையை மிகைப்படுத்திப் பாடல்கள் இசைத்தார்கள். பாதாளத்திலிருக்கிறது நரகம் எனக் கற்பித்தார்கள்.

“அந்தக் காலம், விஞ்ஞானம் தூரதிருஷ்டிக் கண்ணாடியைப் பெற்றெடுக்காத காலம். எனவே கவிஞர்களின் கற்பனா சக்தி மக்களை மயக்கி மகிழ்வூட்டியது. பாமரர்கள் மெய் மறந்து வியந்தார்கள். பகுத்தறிவாளர்கள்—அறிஞர்கள்—கருத்துக்காக அல்ல; கலை நயத்திற்காகப் பாராட்டு வழங்கினார்கள்.

## மக்கள் கவிஞரின் தன்மை

“மக்களின் கவிஞராக மாறுவது சுலபமான காரியமல்ல. மிகவும் சிரமமான இந்தச் சாதனையில் தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார், பாரதி!

“உயர் தர வர்க்கத்தினர் உளம் மகிழ்விக்கும் கவிஞனாவது மிகவும் சுலபம். நீல வான் கடலில் மிதக்கும் வெள்ளி ஓடமான அம்புலியைப் பற்றி இரண்டு பாடல்கள் பாடினால் போதும்; கருவானத் திரை கிழித்து கண் சிமிட்டும் நட்சத்திரங்கள் குறித்துச் சில கவிதைகள் எழுதினால் போதும்; எழில் சிந்தும் மலர்களின் இனிய மணத்தைப் பற்றி இங்கிதமாக இசைத்தால் போதும்; ஆற்று நீரின் சலசலப்பில் எழுந்து எதிரொலிக்கும் தாளலயம், காதல் வெறி மூண்டெழக் கிளம்பும் குளறல், வீரர் தம் தீரம் ஆகியவை குறித்துச் சொற் சித்திரம் தீட்டினாலே போதும்; கவிஞர்கள் வரிசையிலே சரியாசனம் பெற்று, புகழ் விருதும் பெறலாம்.

" ஆனல் மக்களின் கவிஞன் ஒருவன் தன் கடமையைச் சரியாய் ஆற்ற வீசியெறியப் படும் வெறுப்பு வேல்களை எதிர்த்து நடக்க வேண்டும். அபாயங்களில் முக்குளித்து எழ வேண்டும். பாராட்டுதல், ஆதரவு, செல் வாக்கு குறித்தெல்லாம் சிந்திக்கவே கூடாது.

" ஆரம்பத்திலேயே சுப்ரமணிய பாரதியா ரின் கவித்வ மேதை பற்றியும், திறமை குறித் தும் அவரது நண்பர்களான ஒரு சிறு குழுவின ருக்குத் தெரியும். அவர்கள் வியந்து புகழ்ந் தார்கள். ஆனல், ஏனைய மக்கள் அனைவரும் அவர்களது கவிஞராகிய அவரைப் பற்றி அறிந்தது அநேக ஆண்டுகளுக்கு அப்புறம் தான். அப்பொழுது கூட ஒரு வித அரசியல் மெருகேறிய ஒரு சில கவிதைகள் மட்டுமே பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டன. மக்கள் கவிஞர் மட்டுமே கற்பனை செய்து பாடக் கூடிய அலாதித் தன்மைபெற்ற கவிதைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட வில்லை.

" நம் நாட்டில் கவிகளுக்குக் குறைச்சல் இல்லை. வீட்டையும் வேலையையும் மறந்து கோயில் ஒன்றிலே துயிலில் ஆழ்ந்து விடுகிறுன், ஆடு மேய்ப்பவன் ஒருவன். நடு ராத்திரி ரோந்து சுற்றும் பணி மூடிந்து ஆலய அம்மன் குடிகொண்டுள்ள கோவில் திரும்புகிறுள். அப்பாவியான ஆடு மேய்ப்பவனைக் கண்டதும் அவள் அதரங்களிலே குறு நகை நெளிகிறது. அவனை ஒரு கவிஞனுக மாற்ற வேண்டும் என்ற விசித்திர எண்ணம் தோன்றுகிறது. கையி லுள்ள மந்திரக் கோலால் மெதுவாகத் தட்டு கிறுள். விளைவு, அப்பாவி அற்புதக் கவிஞனுக மாறுகிறுன். இத்தகைய கதைகள் மக்களுக்கு மிகவும் பரிச்சயமானவை. தேவதையின் திருக்கர ஸ்பரிசத்தால் கவிஞனுனவன் அந்தத் தேவதை குறித்தோ, அல்லது கடவுளர் அடங் கலுக்குமோ தன் நன்றியைத் தெரிவிப்பதற் காக தேவமாக் கதைகள், துதிப் பாடல்கள் பாட வேண்டுவது கடமை.

" இந்தக் கருத்து பேய்ப் பிடியாகப் பற்றி ஆட்சி செலுத்திய காரணத்தால், மக்களுக்கு அவர்கள் நலனுக்காகப் பாட்டிசைக்கும் புலவன் ஒருவன் கிடைத்த போது கூட, அவனை நேருக்கு நேர் சந்தித்து பேச முடிய வில்லை.

" நான்தான் மக்கள் கவிஞன். அவர்களுக் காக அவர்களைப் பற்றி நான் பாடுகிறேன். காரணம் நானும் அவர்களுள் ஒருவன்' என ஒருவன் துணிந்து சொன்னல், மக்கள் சந் தேகக் கண்களுடன் வெறுப்புடன் அவனைப் பார்ப்பார்கள். அவனுக்கு அங்கீகாரம் கிடைக்காது. எத்தனைக் கெத்தனை அவனது கவிதகள் புரட்சிக் கருத்துக்கள் பொதிந்த னவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ் வளவு அதிகமான எதிர்ப்பை அவன் சமாளிக்க வேண்டி இருக்கும்.

" உழவு சால் ஓட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினுர். தொட்டில் ஆட்டும் தாய் மார்கள், விளையாட்டு வெளிகளிலோ ஓடிவிளை யாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத் தார்.

" கடந்த காலப் புலவச் சிகாமணிகளைப் போல, வேதாந்த வியாக்கியானங்களைச் சுதந் திரக் கோரிக்கைக்குச் சப்பைக்கட்டாக உப யோகிக்கவில்லை. உலகத்தின் தூர தொலைவி லுள்ள நாட்டு மக்களின் சுதந்திரப் போராட் டங்களைக் கவிதைகளாக்கி மக்களுக்குச் சமர்ப் பித்தார். இத்தாலிய சுதந்திர உதயத்தை மாஜினி என்ற தேசீய வீரனின் சலியா உழைப் பால் மக்கள் புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை உன்னதச் சொற்சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார்.

" புரட்சிக்குப் பின் உருவான பிரெஞ்சு நாட்டுக் காட்சியைப் பாடினுர்.

" ஜாரின் தளைகளைத் தகர்த்து நொறுக்கி வீறுடன் எழுந்து நின்ற ரஷ்யாவைப் பற்றிப் புதுமை ஓவியம் தீட்டினுர்.

" சுதந்தர பெல்ஜியம், பிரான்சு, சிகப்பு ரஷ்யா குறித்த சொற்சித்திரங்களே அவர் மக்களுக்குப் பரிசாக அளித்தது.

" இந்திரலோக, பிரம்மலோகக் காட்சிகள் பற்றிய அளப்புகளை அல்ல. பிஜித்தீவு வாழ்வு பற்றிய பேனுச்சித்திரத்தை மக்கள் முன் வைத்து, பாருங்கள் சகோதரர்களே உம்முடன் பிறந்த சோதரர் நிலையை எனக் காட்டினுர், ஆங்கில நாடாகாசிரியன் ஷேக்ஸ்பியரின் தன்மையிலே, மக்கள் கவிஞனின் லட்சணம் அதுதான்!

பாரதியார் குடும்பம்
உட்கார்ந்திருப்பவர்கள் : புதல்வி சகுந்தலா ('பாப்பா'), மனைவி செல்லம்மாள்.
நிற்பவர்கள் : புதல்வி தங்கம்மா, நண்பர் ராமு, நண்பர் விஜயராகவன், பாரதியார்.





## போதுமென்றிருக்கலாமா?

''தொல்காப்பியம் நமக்கு இருக்கும் போது, நமக்கு வேறென்ன வேண்டும் என்றிருந்தால், அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதுமென்றிருந்தால், கலிங்கத்துப் பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப் பரணி போதுமென்றிருந்தால்—மனோன்மணீயமே போதுமென்றிருந்தால்—பாரதியாரின் தேசிய கீதங்களை கேட்டிருக்க முடியுமா? பாரதியாரின் தேசிய கீதங்களே போதுமென்றிருந்தால், தேசிக விநாயகம் பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைந்தூட்டும் பாக்களைப் பார்த்திருக்க முடியாது. தேசிக விநாயகம் பிள்ளையே போதுமென்றிருந்தால், நாமக்கல்லாரின் 'கத்தியின்றி இரத்தமின்றி' என்ற புது மாதிரியான சண்டை தத்துவப் பாடலைக் கண்டிருக்க முடியுமா? நாமக்கல்லாரே போதுமென்றிருந்தால், 'கொலைவாளினை எடடா! மிகக் கொடியோர் செயலறவே' எனும் பாரதிதாசனின் உணர்ச்சி மிக்க புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது!''

—அண்ணா

" தன் நாட்டு மக்களின் மூட்டாள்தனத்தையும், குற்றங் குறைகளையும் சுட்டிக் காட்டத் தயங்கமாட்டான் மக்கள் கவிஞன்!

" சிந்தையிலும் செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறார்கள், அதே வேளையில் உலகத்தின் இதர நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன, எவ்வளவு சிறப்பாகச் செயல்புரிகின்றன, அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது என எடுத்துக்காட்ட அஞ்சமாட்டான்!

" வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக்குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு தொடை நடுங்கவில்லை பாரதி! அவர்களது தவறுகளையும் தயங்காமல் மக்கள் முன் வைத்தார்! வஞ்சகத்தையும், துரோகத்தையும் அவற்றின் உண்மை சொரூபத்திலே கொணர்ந்து நிறுத்தினார்! ஒப்பற்ற தீரம், அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார் அவர்!

### பழமை உடும்புகளைச் சாடினார்!

" பாரதியை, 'தேசியக் கவி' என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒரு சாரார். கவிஞர் மீது உள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்திரித்துக் காட்டுவதன் மூலம் கவிஞரின் மற்றொரு தன்மையை—அதாவது பாரதி மக்களின் கவிஞர் என்ற உண்மையை—மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

" சுற்றி வேலி கட்டிக் கொண்டு அந்த எல்லைக்குள் அடங்கி, ஒடுங்கி விடுபவையல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த, தேசீயச் சிமிழ்களில் அவற்றை அடைக்க முடியாது. புராதன சம்பிரதாயங்களின், புராணக்கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி ஆவேசமாக எறிகிறார் அவர் சுடுசொற்களை: 'ஏடு முட்டாள்களே! வெகு காலமாக நிலவி வருகிறது என்ற ஒரு காரணத்திற்காகச் சில விஷயங்கள் உன்னதமானவை, உண்மையானவை என்று சாதிக்க வாடா வருகிறீர்கள்? பொய்யும், புளுகும் யுக யுகாந்திரமாகத்தான் உலவி வருகின்றன. அவை உயர்ந்த பண்புகள்; ஆகவே அவசியம் எல்லோராலும் அனுஷ்டிக்கபட வேண்டியவை என ஒப்புக் கொள்ளத் தூண்ட முன் வருவீர்களா?'

### நிகழ்காலத்தில் வாழ்ந்து, எதிர்காலம் சமைப்போம்!

" புராதன காலத்தில் அறியாமையும், குள்ளக் கருத்துக்களும் இல்லவே இல்லை என்று எண்ணுகிறீர்களா நீங்கள்! செத்த சிந்தனைகள் என்ற பிணத்தை ஏன் இன்னும் நீங்கள் கட்டி அழ வேண்டும்? நிகழ்காலத்தில் வாழ்ந்து எதிர்கால வாழ்விற்கு வகை செய்யுங்கள். இறந்த கால அந்தகாரத்தில் துழவ வேண்டாம். கடந்த காலம் கடந்து போனது போனதுதான், **'சென்றது இனி மீளாது'** இது பாரதி வாக்கு. இங்கேதான் மக்கள் கவிஞரை நாம் சந்திக்கிறோம். வாழ்வோடு ஒட்டிய ஒழுக்க முறையை மக்கள் சமுதாயத்திற்காக அமைத்துக் கொடுத்துள்ளார் அவர்.

'' புராணக் கோட்பாடுகளைப் போல மண்ணோடு ஒட்டாத சித்தாந்தம் அல்ல அவர் காட்டும் வழி. மக்களுக்கு ஒரு புதிய விழிப்பு ஊட்டினார். உலகம் மாயை என்ற சாக்குருவி வேதாந்தம்—'பாழுலகம் பொய்யே; பரமபதம் போ' என்ற படு பாடாவதிப் பண்பாடு—மக்களிடையே பரவுவதைத் தடுத்தார். அத்தகைய நம்பிக்கையைக் கண்டு சிரித்துத் துப்பினார். ஆசிரமவாசிகளுக்கு ஆத்திரம் வரச் செய்தார். விளைவு என்னகுமோ என வீண் பீதி கொள்ளவில்லை. அத்தகையச் சோம்பேறி வேதாந்தங்களில் ஊறிய மக்கள் உதவாக்கரைகளாக, ஒன்றுக்கும் உதவாத பிற்போக்குவாதிகளாக ஆகிவிடுவார்கள் என்பது அவர் கொள்கை.

## அவரது மதம்

“பசி, வறுமை, அறியாமை, முதலியவற்றை அவரால் சகிக்க முடியாது. பணக்காரர்களின் கொடுமையைப் பலமாகச் சாடுகிறார் அவர்.

“தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்” எனக் கர்ஜிக்கிறார்.

“வாழ்வு வசதிகள் அனைத்தும் பெற்று மக்கள் வாழவேண்டும், வர்த்தகம் வளமாக வேண்டும், இயந்திரத்தொழில்கள் பெருகவேண்டும், புது யுகத்தின் நலன்களெல்லாம் நாட்டிலே குவிய வேண்டும்” என்றெல்லாம் விரும்புகிறார்.

“பூசாரித்தனமும், சுலோக ஊளையும் அவரது மதக் கோட்பாடுகள் அல்ல. மக்களுக்கு உழைத்தலே—சகோதர ஜீவன்களுக்குப் பணிபுரிவதே—அவரது மதம்.

“இத்தகைய அபாயச் சூழலில், நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக, உள்ளந் தளராமல் பாரதியார் நடந்து செல்வதை நாம் காண்கிறோம்.

## பாரதி தோன்றிய காலம்

“இரு யுகங்கள் மோதும் எல்லை, பாரதி தோன்றிய காலம். பிறந்த ஊரில் பூர்ண கும்ப மரியாதைகள் பெற்று பிரபுத்வ ஆட்சி கொலுவிருந்தது. குடிசைகள் சூழ மையத்தில் நிமிர்ந்து நின்றது எட்டைய புரத்தில் மன்னரின் மாளிகை. பழைய ஜாதிப் பாகுபாடுகளின் ஆட்சி ஆதிக்கம் குன்றவில்லை அப்போது. அவரும் ஜாதியில் பிறப்பால் பிராமணர். பிரபுத்துவத்திற்கும், வைதீக சனாதனத்திற்கும் ஊடே நவீன நாகரிகம் தலை நீட்டிக் கொண்டிருந்த காலமும் அவர் தோன்றிய சமயம்தான். புரட்சி பூத்துக் கொண்டிருந்தது; இயந்திர உலகில் சோகமும் வெறுப்பும் மின்னும் கண்களுடன் சமுதாயம் பழமைமுறைபுதிய, அமைப்பு முறை நுழைவதைப் பார்த்துக் கொண்டிருந்தது. புது யுகத்தின் கண்களிலே பழமைக்குச் சவால் விடுக்கும் மிடுக்கு இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் தான் பாரதி தோன்றினார். பழைய யுகத்திற்கும், புது யுகத்திற்கும் நடக்கவிருக்கும் போராட்டத்தில் தானும் ஒரு வீரனாகப் பங்கு கொள்ளலாம் என அவர் கருதியிருக்கவும் கூடும்! பழைய சமுதாய அமைப்பு முறையிலோ அவரது ஸ்தானம் பந்தோபஸ்து நிறைந்தது. வசதிகள் மலிந்தது.

## பாரதியாரின் சிறப்பு

“பாரதி பிறந்த இந்த நாடு முரண்பாடுகள் செறிந்த களம். அகந்தையும் பணிவும், கொடூரமும், அன்பும் நாட்டிலே ஒருங்கே குடி கொண்டிருந்தன. செயல் திறம் நாட்டிலே ததும்பிக் கொண்டிருந்தது. அதே வேளையில் மக்கள் மனங்குலைந்து செயலாற்றவர்களாகும்படி செய்யும் அபத்தக் கற்பனைகளும் அபரிமிதமாக உலவின. பகட்டான கற்பனைகள், பல்லாயிரக் கணக்கான ஊமை மக்கள், அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை - பயமும் சூரத்தனமும் பக்கத்திலே பக்கத்திலே கொலுவிருந்த தன்மை--பக்தியும் பயமும் பாசறை கொண்டிருந்த காட்சி-அனைத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்தது நாடு.

‘பைரன்’,‘பர்க்கு’ ஆகியோர் இந்த நாட்டிலே அச்சமயத்தில்தான் கால் பாவினார்கள். அவர்களை வரவேற்க நாட்டிலே இருந்தவை பாரதமும், பாகவதமும்தான். துப்பாக்கியும் பீரங்கியும் முழங்கி நாட்டு மக்களின் காதுகளிலே ரீங்காரம் செய்தன. முரண்பாடுகள் மலிந்த இந்த நிலப்பரப்பிலே அவற்றோடு கோவில் நகராக்கள் கலந்து முழங்கிய முழக்கமும் ஓயவில்லை!

“பாரதி தோன்றினார். ஆனால் நாட்டின் இயல்பிற்கிணங்க சரித்திரம் ஆமை வேகத்தில் தான் நகர்ந்து கொண்டிருந்தது. சரித்திர ரதத்தைத் துரித கதியிலே செலுத்தப் பலமாகத் தடிபோட்டு எழுப்ப வேண்டி இருந்

எட்டையபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு மண்டபம்



## பாரதியாரின் கையெழுத்து



தது. பாரதியின் சிறப்பு அவர் அத்தகைய தடிபோட்டு எழும்பும் பணியில் ஈடுபட்டதில் தான் இருக்கிறது. மக்களின் கவிஞராக மாறி மகத்தான முறையில் அவர் அப்பணியைச் செய்தார்.

" **பாரதி வெறும் தேசீயக் கவிஞர் அல்ல. [illegible] வானில் மின்னிய விடிவெள்ளி [illegible]திருந்த [illegible]க்கிறோம். அவர்!** அந்நியன் மீது அவருக்கு ஆத்[illegible] நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என விரும்பினர், அவர். அது மட்டுமே அவர் இலட்சியமாக, தீர்மான முடிவாக இருந்துவிடவில்லை. அதுதான் அவரது இலட்சியத்தின் ஆரம்பம்.

" அந்நிய ஆட்சியினின்று விடுதலை பெறுவதுடன் நாட்டு மக்கள், அவர்களைப் பிணைத்து இறுக்கும் தளைகள் அத்தனையையும் தகர்த்து எறிந்து உண்மைச் சுதந்திர புருஷர்களாக விளங்க வேண்டும் என விரும்பினர் அவர். உலக மக்களின் முன்னிலையிலே உன்னத உயர்வு பெற்றுத் திகழ வேண்டும் என அவாவினர். புதிய விழிப்புப் பெற்று புதுமை ஆண்களாகவும், பெண்களாகவும் நாட்டு மக்கள் நடமாடும் காட்சியைக் காண ஆசைப்பட்டார்!

" மக்களைப் பீதிப் போர்வை, முக்காடாகக் கவிழ்ந்து மறைத்திருப்பது அவர் பார்வையில் பட்டது. அச்சம் அணி செய்யும் முகத்தினராகக் கண்டார் மக்களை. தொட்டதற்கெல்லாம்—எடுத்ததற்கெல்லாப்—நாட்டு மக்கள் பயந்து செத்தனர். அந்நியனையும் அவனது துப்பாக்கித் தோட்டாக்களையும் கண்டு மட்டும் அஞ்சி ஒடுங்கி நடக்கவில்லை அவர்கள். சக மனிதர் சிலர் முணுமுணுக்கும் மந்திரங்கள், சுலோகங்கள் முன்பும் பம்மி மரியாதை செய்து வாழ்ந்தார்கள். பிசாசுகள், பூதங்கள் என்று அவர்களை எவ்வளவோ குலை நடுங்கச் செய்தன!

### சுதந்திரப் போராட்டம்

" இத்தகைய மனிதர்கள் சுதந்திரக் கொடி உயர்த்தும் மக்களாகத் திகழ முடியாது; இத்தகையோர் வாழும் நாடு தலைநிமிர்ந்து, உலகத்தின் இதர நாடுகளுக்குச் சரிசமமாகப் பார்வை எறிய முடியாது; அந்நிய ஆதிக்கத்தை அகற்றிய பின்பும் கூட இது சாத்தியம் இல்லை என்பதை அவர் உணர்ந்தார். அதனல் நாட்டு மக்கள், முதலில் அச்சத்தை அடித்துத் துரத்த வேண்டும் என அவாவினர். தாழ்வு மனப்பான்மையைத் தூவென்று உதறித் தள்ள வேண்டும் என்று தூண்டினர். மக்கள் மனதிலே நம்பிக்கையையும், தைரியத்தையும் விதைத்தார். அவர்களுள் மறைந்து கிடக்கும் மாபெரும் சக்தியைப் புலப்படுத்தினர். அந்த மகத்தான பலம் எவ்வாறு விரயமாகிறது, மக்களின் தூங்குமூஞ்சித் தன்மை, அறியாமை, மூட நம்பிக்கைகள், தாழ்வு மனேபாவம், ஜாதி வெறி காரணமாக எவ்வளவு வியர்த்தம் விளைகிறது என்பதை விளக்கினர்.

" சிந்தனைத் தெளிவுடன் பாரதி நிலைமையை ஆராய்ந்தார். நாட்டில் உலவும் தீமைகளை வேரோடு கெல்லி எறிய முனைந்தார். மக்கள் நலனில் அக்கரை கொண்ட மக்கள் கவிஞரைத் தவிர யாரும் அவ்வளவு முயற்சி எடுத்திருக்க முடியாது.

"பாரதியாருக்குத் தெரியும், மக்கள் சக்தி ஆட்சி செய்யத் தொடங்கும் யுகம் இந்த யுகம் என்பது. மக்களே மன்னர்களாக மாறும் காலம் இது என்பதை அவர் அறிவார். எனவே அத்தகைய சுதந்திரத்திற்காகப் போராடும்படி பொது மக்களை அவர் தூண்டினார்.

"கடவுளர்களுக்குப் பாமாலைப் பதிகங்கள் பாடுவதோடு நின்றுவிடுவதில்லை. பாரதி, மண் ஆளும் மன்னர்களுக்கு விண்ணப்பப் பாக்கள் எழுதி விடுக்கவில்லை.

## முடியாத பணி முற்றுப்பெறும்!

"மக்கள் கவிஞனை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னைகள் மகத்தானவை. புதிய உண்மைகளை மக்கள் உணரும்படிச் செய்வது-புதுப் பாதையிலே அவர்கள் நடைபோடத் தூண்டுவது-புதிய நோக்கிலே விளைவுகளை எடைபோட அவர்கள் முயலும்படி செய்வது-எல்லாம் மக்கள் கவிஞனின் வேலை!

"ஜோதிடனது பிணைப்பிலிருந்து விடுவித்து நாட்டு மக்களை வான சாஸ்திரி பக்கம் திருப்புவது, இரசவாதியை அவர்கள் மத்தியிலிருந்து துரத்திவிட்டு இரசாயனவாதியைக் கொணர்ந்து நிறுத்துவது எல்லாம் அவன் வேலை!

"மதகுருவை விலக்கிவிட்டு, அறிவுக் கண் திறக்க உதவும் ஆசானை நாடச் செய்வதும் அவன் வேலைதான்!

"செப்பிடு வித்தைகள், மந்திர தந்திரங்கள் மூலம் வியாதி ஓட்டுபவனை ஓட்டிவிட்டு, மருந்துகள் மூலம் குணப்படுத்தும் மருத்துவனுக்கு வழி வகுத்துக் கொடுக்க வேண்டியவனும் மக்கள் கவிஞனே!

"மூடநம்பிக்கைகள் நீர்மூலமாக்கப்பட வேண்டும், விஞ்ஞானம் விருத்தி பெறுவதற்காக. சுருக்கமாகச் சொல்லப்போனால், ஒரு புரட்சிக்காரனாக மக்களின் கவிஞன் இயங்க வேண்டும். கொடுங்கோலனை வாழ்விக்க வந்த வானகத் தூதன் என்றும், வாழ்விக்க வந்தவனை கொடுங்கோலன் எனவும் மக்கள் சுலபமாக நம்பிவிடுவார்களாதலால், மக்கள் கவிஞனின் வேலைச் சிரமம் மிக்கதாகிறது!

"பாரதியார் பயமின்றிப் போராடினார்! அவர் நடத்திய போராட்டம் முடியவில்லை! அதற்குள்ளாகவே அவர் மறைந்துவிட்டார். அவர் சிந்தனைப் படைபலத்தை நமக்கு உதவியுள்ளார். அதனைத் துணைகொண்டு போராட்டத்தை நாம் வெற்றிகரமாக முடிக்க முடியும்.

"மக்கள் கவிஞருக்கு நாம் வழங்கும் மகத்தான மரியாதை அவர் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதுதான். உக்கிரகமாக-உன்னதமான போக்கில்-மக்கள் சுதந்திரத்திற்கான போராட்டம் நடைபெற வேண்டும். வேண்டிய வீரர்கள் இருக்கிறார்கள்! வெற்றி காணுவது உறுதி!"

[பேரறிஞர் அண்ணா அவர்கள் வானொலி மூலம் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவின் தமிழாக்கம் இது.]

(நன்றி: செல்வ நிலையம், சென்னை-7.
அனைத்து இந்திய வானொலி, சென்னை]



பாரதியாரால் பூணூல்
அணிவிக்கப் பெற்ற
அரிசனச் சீடர் கனகலிங்கம்.



# கைத்தறி பற்றி அறிஞர் அண்ணா



"நூல்—எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான்! நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதுதான்! பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவதுதான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்காத வாய்ப்பும், வசதியும் விஞ்ஞானக் கருவிகளின் உதவியும் கிடைக்காத போதும்கூட நேர்த்தியான—மெச்சத் தக்க—துணிகளைக் கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்.

"ஆலைத் துணியில்தான் கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் இப்போது கைத்தறியில் கண்ணைக் கவரும் ஆடைகள் வேகமாகத் தயாராகின்றன.

"நெசவாளர்களது எதிர்காலத்தைக் கவனித்து—வேறு தொழிலில் அமர்த்த வேண்டும் என்பது கவனிக்கப்படத்தக்க பிரச்சினை என்றாலும்—

"பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் நேர்த்தியான கைத்திறமையை—வெளிச் சந்தையிலிருந்து ஏராளமான பணத்தை ஈட்டித் தந்த கைத் திறமையை—விட்டுவிட வேண்டும் என்பது வரவேற்கத்தக்க கருத்தல்ல.

"மக்களின் தேவைகளை அறிந்து ஆடைத் தினுசுகளை அடிக்கடி மாற்ற வேண்டும் என்று சில பெரியவர்கள் கூறுகிறார்கள்.

"அப்படிப்பட்டவர்கள் ஆண்டுக்கொரு முறை கண்காட்சியில் மட்டும் ஆடைகளைக் காண்பவர்களாக இருப்பார்கள். ஏனென்றால், கைத்தறியாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை சேலைத் தினுசுகளை மாற்றி வருகிறார்கள்.

"ஒரு சினிமா வெற்றிகரமாக ஓடிவிட்டால் போதும், அடுத்த வாரமே அந்தப் பெயரில் ஒரு அழகான சேலைத் தினுசு தயாரித்து விடுவார்கள் கைத்தறியாளர்கள்.

"இத்தனைக்கும் அந்தச் சினிமாவை நான்கு முறை பார்க்கும் வசதி அந்த நெசவாளர்களுக்கு இல்லை. ஒரே முறைதான் பார்க்கிறார். அந்தப் படத்தில் வரும் கதாநாயகி அணிந்திருக்கும் சேலையைப் போல், தயாரிக்க நினைக்கிறார். அந்த நினைப்பு நம்பிக்கையாய் மாறி, உள்ளத்திலிருந்து கிளம்பி, விரல் நுனிக்கு வருகிறது. பிறகு தறியிலமர்ந்து அழகான சேலையைத் தயாரிக்கிறார்.

"கோடிக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலால் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாட்டின் சந்தை தேடிக் கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்ததாகும்.

"நெசவுத் தொழில் இதுநாள் நசித்துப் போகாமல் இருக்க—நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட—உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள்தான்! ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள்தான் மறவாமல் கைத்தறியாடைகளை வாங்குபவர்கள்! ஆகவே, கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆடவர்களைப் போல் தாய்மார்களும் ஆமதாபாத்தையும், கட்டாவையும் நம்பத் தொடங்கினார்கள் என்றால் நெசவாளர்கள் வண்ணாரப்பேட்டையில் — தண்டையார்ப்பேட்டையில் —வீதியோரங்களிலோ — குடிசைகளிலோ—குடியேற வேண்டிய வேதனையான நிலை ஏற்பட்டிருக்கும்!"

# உள்ளங்கவர் கள்வன்!

—நாவலர் இரா. நெடுஞ்செழியன்



உள்ளங்கவர் கள்வன்! ஆம்! என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன்! அனைவர் உள்ளத்தையுங் கவர்ந்த கள்வன்! ஆனால் குற்றமற்ற கள்வன்!

கள்வன் கொள்ளை கொள்பவன்தான் ; ஆனால் செய்யும் களவுக்காகக் குற்றக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்த முடியவில்லை. காரணம் குற்றம் அவன் மேலிருப்பதில்லை. பறி கொடுப்பது உண்மைதான்; ஆனால் ஏமாந்து எவருங் கொடுப்பதில்லை. ஆகவே பறி கொடுத்தோர் வழக்குத் தொடுக்க இயலுவதில்லை.

அத்தகைய கள்வனொருவனை நான் என் வாழ்நாளில் கண்டேன்—காதல் கொண்டேன்—கட்டித் தழுவினேன்—அண்ணாவென்று கண்டேன்—தம்பியானேன்!

குள்ள உருவம்; குறும்புப் பார்வை; விரிந்த நெற்றி; பரந்த மார்பு; கறைபடிந்த பற்கள்; கவலையில்லாத தோற்றம்; நறுக்கப்பட்ட மீசை; நகை தவழும் முகம்; சீவாத தலை; சிறிதளவு வெளிவந்த தொப்பை; செருப்பில்லாத கால்; சரிப் பொருத்தமில்லாத உடைகள்; இடுப்பில் பொடிமட்டை, கையில் வெற்றிலைப் பாக்கு பொட்டலம் இந்தத் தோற்றத்தோடு அதோ காட்சியளித்து நிற்கிறாரே அவர்தான் அண்ணாத்துரை! அறிஞர் அண்ணாத்துரை!! அண்ணா!!!

அறிவாளி—படிப்பாளி—பேச்சாளர் —எழுத்தாளர்—பத்திரிகாசிரியர்—நடிகர் —நாடகாசிரியர்—தலைவர்—தளபதி என்ற முறையில் அண்ணாத்துரையை நாட்டு மக்கள் அறிவார்கள். ஆனால் 'அண்ணா'வைப் பலரும் அறியமாட்டார்கள்; அறிந்ததில்லை; அறிய முடிவதில்லை.

''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்பமொழிவதாம் சொல்'' என்று வள்ளுவர் வகுத்துக் கூறிய இலக்கணத்திற்கு இலக்கியம் உண்டாக்கியவர் அறிஞர் அண்ணாத்துரை தான்!

சிறந்த பேச்சாளர் பட்டியலின் முன்னணியில், டெமாஸ்தெனிஸைக் கொண்டு வந்து நிறுத்துகிறது கிரேக்க நாடு ; சிசரோவைக் கொண்டு வந்து நிறுத்துகிறது இத்தாலி ; எட்மண்ட் பர்க்கைக் கொண்டு வந்து வைக்கிறது இங்கிலாந்து; ராபர்ட் கிரீன் இங்கர் சாலைக் கொண்டு வந்து நிலைநிறுத்துகிறது அமெரிக்கா ; சிறந்த பேச்சாளர் வரிசையின் முதலிடத்தில் தமிழகம் நிலைநிறுத்துவதற்குரிய ஒரே ஒருவர் அறிஞர் அண்ணாதான்.

**ஏனைய எழுத்தாளரின் எழுத்தில் தமிழைக் காண்கிறோம்; அறிஞர் அண்ணாவின் எழுத்தில் தமிழரையே காண்கிறோம்!**

அவருடைய உரையாடலிலும், சொற்பொழிவிலும், எழுத்திலும் காணப்படும் ஒரு பெரும் பண்பு, 'தெளிவு'. அவரிடத்தில் அவசரச் சிந்தனை கிடையாது. எந்த உருவத்தில் வந்தாலும் ஆழ்ந்த கருத்துக்களே அதில் காணப்படும். அவருடைய கண் காதுகளில் பட்டுத் தெறிக்கும் எந்த நிகழ்ச்சியும், பசுமரத்தடித்த ஆணி போல் அவரது உள்ளத்தில் பதிந்துவிடும். பதியும் அவை ஊற்றுக்கண் போல் உன்னுந்தோறும் ஊற்றெடுக்கும். முன்பின் கருத்துக்களை ஒத்திட்டுப் பார்க்கும் ஆற்றலும், அவற்றைத் தெளிவுபடுத்திக் காட்டும் முறையும் அண்ணாவுககு அமைந்திருப்பதுபோல் வேறு எந்த எழுத்தாளருக்கும், பேச்சாளருக்கும் அமைந்ததில்லை. அவருடைய சொற்பொழிவு கலகலவென்று ஓடும் சிற்றருவியின் பாங்கு போலவும், சொற்கள் நாணயச் சாலையில் அடிக்கப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாய் விழும் நாணயங்கள் போலவும், ஒன்றோடு ஒன்று மோதுதலின்றி வெளிவரும் தன்மையனவாகவும் காணப்படும்.

அண்ணாவின் உரையாடலே தனிச் சிறப்பு வாய்ந்தது. எவ்வளவு நேரமானாலும், ஏன், எவ்வளவு நாட்களானாலும் தெவிட்டாதத் தீங்கனி போன்றது. உரையாடலில் கேலி, கிண்டல், நகைச்சுவை ஆகிய ஆயுதங்களை அவர் வீசுமளவுக்கு அழகாக வீசுபவர் வேறு யாரையும் யான் கண்டதில்லை!

அவர் எழுதுவது பெரும்பாலும் இரவு நேரங்களில்தான். எழுத உட்கார்ந்துவிட்டால் காலை ஐந்து அல்லது ஆறு மணி வரையிலும் எழுதுவார். ஒரு அடித்தல், திருத்தமில்லாமல் எழுதி கீழே விடும் காகிதங்கள், ஒன்றன் பின் ஒன்றாக வந்து குவிந்து கொண்டே இருக்கும். சளைக்காமல் ஆயிரக்கணக்கான பக்கங்களை எழுதித் தள்ளும் அருந்திறனுடையவர்.

**'எதையும் தாங்க இந்த இதயம் உண்டு'** என்ற குறிக்கோளோடு, எதையும் வரவேற்று நிற்கும் பண்புடையவர். புகழ்ச்சிச் சொற்கள் அவர் மேல் வீசப்படும் போதும் அதிகமாக மகிழ்ச்சியடைந்துவிடுவது கிடையாது ; வசைச் சொற்கள் வீசப்படும் போதும் ஆத்திரமடைவது கிடையாது. இரண்டிற்கும் பதில் ஒரு புன்னகைதான்! வஞ்சம், சூழ்ச்சி, பொறாமை, பேராசை, தன்னலம், தற்பெருமை, யதேச்சாதிகாரம் முதலிய கீழ்த்தர பண்புகள் அவரிடம் எப்பொழுதும் இருந்தது இல்லை.

அரசியல் கட்சியாகிய திராவிடக் கழகத்தில் தன் பங்கைப் பற்றி அவரே தெரிவிக்கிறார். கேளுங்கள் : ''கழகம் எடுத்துக் கொண்ட, எந்த முக்கியமான திட்டத்துக்கும், வேலை முறைக்கும், கட்டுப்படாமலிருந்தவன் அல்ல; கழகம் நெருக்கடியான கட்டத்தில் இருந்தபோதெல்லாம், விட்டுவிட்டு ஓடினவனல்ல; பட்டம் பதவிகளை வைத்துக் கொண்டு விட்டுவிட முடியாது என்று கூறினவனல்ல ; தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்று கட்சி தீர்மானித்த பிறகு, மீறித் தேர்தலுக்கு நின்றவனல்ல ; சிறை புக வேண்டிய திட்டம் வந்தபோது, ஒளிந்து கொண்டவனுமல்ல; அடிக்கடி, கட்சி பலவற்றைத் தேடிக்கொண்டவனுமல்ல; கட்சிக்குள்ளாகவே, சேலம் மாகாண மாநாட்டின்போது, செல்வவான்களின் மயக்க மொழியில் வீழ்ந்தவனல்ல—இதுவரை வழுக்கி விழுந்ததில்லை—திட்டங்களைக் கண்டித்தோ, மாற்ற வேண்டுமென்று கூறினதோ, கட்டுக்கடங்க மறுத்ததோ இல்லை—ஆனால் இந்த ஆகஸ்ட் 15-ஆம் தேதி பற்றிய பிரச்சினை, உண்மையாகவே, என்போல் எண்ணற்றவர்கட்கு மன வேதனை தரக்கூடிய விதத்திலே, தவறான முறையிலே, திருப்பப்பட்டிருக்கிறது. . . .இது கட்சிக் கட்டுப்பாட்டையும், தலைவரின் அறிக்கையையும் மீறுவதாகும் என்று கருதப்பட்டு, என் மீது நடவடிக்கை எடுக்க, முன்வருவதானாலும், என் வாழ்நாளில் **''பிரிட்டிஷ் ஆட்சி கூடாது''** என்ற கொள்கையைக் கொண்டவனே நான், என்பதை மக்களுக்குக் கூற, எனக்கிருக்கும் ஒரே நாளான, கடைசிநாளான ஆகஸ்ட் 15-ஆம் தேதியின் முக்கியத்துவத்துக்காக வேண்டி, கட்சியின் கடுமையான நடவடிக்கைக்கும் சம்மதிக்க வேண்டியவனாகிறேன். **தலைவரும், கட்சியும் என் போக்கு தவறு** என்று கருதி, **என்னைக் கட்சியை** விட்டு நீக்கினாலும், நான், சமூகச் சீர்திருத்தம், பொருளாதாரச் சமத்துவம் என்னும் அடிப்படைக் கொள்கைகளைக் கட்சிக்கு வெளியே இருந்தாகிலும் செய்து வருவேன்.''

அண்ணாவின் போக்கு கண்டு வெறுப்புற்று சிங்கமெனச் சீறுவோரும், புலியெனப் பாய்வோரும் அண்ணாவின் முன் வந்ததும், பூனையென அடங்கிப் போவதை பல முறை பார்த்திருக்கிறேன்.

எனினும் அவரே கூறுவதுபோல் அவர் **பெரியாரின் பரம்பரை.** பெரியாரின் உள்ளத்தில் இருப்பதை எப்படிப் பிறர் அறிய முடியாதோ அவ்வாறே, அண்ணாவின் உள்ளத்தில் இருப்பதையும் அறிய முடிவதில்லை. பிறர் உள்ளத்தைக் கவர்வது போலவே என் உள்ளத்தையும், அண்ணா கவர்ந்துதான் வாழ்ந்தார். அவர் கள்வன்தான்! ஆனால் குற்றமற்றக் கள்வன்!

**''இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம்; அதிலே நியாயமிருக்கிறது !.... கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம் ; அந்தத் துறையிலே இன்னும் நாம் தேர்ச்சி பெறவில்லை என்பதால் !.... ஆனால் 'சோறு போடு' என்று அன்னியரிடம் கேட்பது ?''**

**—அண்ணா**

## சட்டம்

"சட்டம் ஒரு இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு! அந்த விளக்கு ஏழைகளுக்கு எட்டாது!"

—அண்ணா



"சொந்த வாழ்க்கையிலே அக்கறை காட்டுவது சபலம். அதனை நீக்காதவர் களால் பொது வாழ்க்கை என்னும் போர்க்களத்திலே உலவ முடியாது!"

—அண்ணா

## வீட்டுக்கொரு புத்தகசாலை வேண்டும்!

"விஞ்ஞான வித்தகர்கள் மக்கள் வாழ்க்கையை வளமாக்க பல அற்புதங்களைக் கண்டு பிடிப்பதை மக்கள் அறியமாட்டார்கள். எதிர் கால உலகம், விஞ்ஞானிகளைப் பற்றிய நல்ல ஏடுகளைத் தயாரித்து மக்கள் மன்றத்திலே வைத்துப் பொது அறிவை விருத்திச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு புத்தக சாலையை அமைக்க வேண்டும்."

—அண்ணா



"அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற முன்வருபவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்கிறது. மதிப் பளிப்பதில்லை - மாச்சரியத்தை வாரி வீசுகின்றது. துணை புரிவதில்லை; தொல்லை தரு கிறது. எனினும் அந்த ஒரு சிலரால்தான் நாடு முன்னேறு கிறது.

—அண்ணா

"வைரம் ஜொலிக்க வேண்டுமானால், சாணை பிடிக் கத்தான் வேண்டும். தங்கம் பிரகாசிக்க வேண்டுமானால், தணலில் காய்ச்சத்தான் வேண்டும். ஆம், அதைப் போல, நல்வாழ்வு பெற வேண்டுமானால் நாம் பகுத் தறிவுப் பாதையில் செல்லத் தான் வேண்டும்."

—அண்ணா



"மாற்றான் வீட்டுத் தோட் டத்திலே பூத்திடும் மல்லிகைக் கும் மணம் உண்டு - ரசிக்கத் தான் செய்வோம். அது போலத்தான் பேசுபவரின் கருத்து பயன் தருமாயின், கேட்போரின் கூட்டுறவு எத் தன்மையதாக இருப்பினும் கேட்பவர்கள் ஏற்றுக் கொள் வது உறுதி."

—அண்ணா

"நமக்கு இன்னலும், இடையூறும் இருக்கத்தான் செய்யும்; ஆனால் நமது உழைப்பு ஒரு நாளும் வீணாகாது!"

—அண்ணா



## நமது தலையாய கடமை!

"போர் வீரர்கள் செல்வதற்கு முன், பாதை போடுவோர் கரடு முரடான பாதை களைச் செப்பனிட்டு முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல நம் சமுதா யத்தில் அடைந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும், அறவே ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்து விட்டுச் செல்வது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்."

—அண்ணா

"காலம் மாறக் கூடியது; மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்."

—அண்ணா



அமெரிக்காவிலிருந்து தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள் தமது கைப்படத் திரு ராஜாஜிக்கு எழுதிய அன்பொழுகும் ஆங்கிலக் கடிதத்தையும் அதன் தமிழாக்கத்தையும் நம் வாசகர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் வழங்குகிறோம்.

நியூயார்க்
11-10-1968.

மதிப்பிற்குரிய ராஜாஜி,

மருத்துவ மனையிலிருந்து வெளி வந்த அன்றே தங்களுக்கு எழுத விரும்பினேன். ஆனால் அப்போது மிக்க பலவீனமாயிருந்தேன். அதோடு, டாக்டர் மில்லர்மேற்கொண்டு தெரிவிக்கும் அபிப்பிராயத்துக்காகவும் காத்திருந்தேன். 10-ந் தேதி டாக்டர் மில்லர் என்னை மீண்டும் பரிசோதித்து பார்த்துப் பூரண திருப்தி தெரிவித்தார். ஆயினும் நான் இம் மாத இறுதி வரை இங்கு நீடித்துத் தங்க வேண்டும் என்று கூறினார். மீண்டும் இம் மாதம் 14-ந் தேதி நான் டாக்டர் மில்லரைச் சந்திக்கிறேன். தங்களது கடிதத்தில் தாங்கள் பேரன்புடன் குறிப்பிட்டது போல், புதிய சாப்பாட்டு முறைக்கு நான் எந்த அளவுக்கு என்னைச் சரிப்படுத்திக் கொள்ளப் போகிறேன் என்பதே பிரச்சனை. இதுவரையில் நான் முழுச் சாப்பாடு உட்கொள்ளும் நிலையில் இல்லை. இருப்பினும் அதனால் நான் அயர்வாகவோ, பலவீனமாகவோ உணரவில்லை. தங்களது நல்லெண்ணம் எனக்குத் தலைசிறந்த ஔடதமாக வேலை செய்தது. தங்களிடமிருந்து வந்த அன்பு மொழிகளை நான் என்றென்றும் நினைவில் வைத்

New York
11/10/68

Revered Rajaji,

I wanted to write to you the day I was discharged from the Hospital — but I was too weak. Moreover I was awaiting Dr. Miller's further opinion. Dr. Miller examined me again on the 10th and expressed complete satisfaction. But he also asked me to prolong my stay here till the end of the month. I am meeting Dr. Miller again on the 14th of this month. As you have so kindly referred in your letter, the problem now is how best to acclimatise myself to the new food policy. As yet I am not in a position to take a full meal! But on that account I do not feel fatigue or weakness. Your good wishes acted as the best tonic to me and I shall ever remember the kind words from you. I do not know how to express my heartfelt thanks to C.P. our

திருப்பேன். இங்குள்ள நமது தூதர் ஜி. பி.-க்கு எனது இதய பூர்வமான நன்றிகளை எப்படி வெளியிட்டுச் சொல்வது என்றே தெரியவில்லை. எனக்கு ஒரு சகோதரராக அவர் இருக்கிறார். அவரைவிட அன்பான ஓர் ஆன்மாவை, பண்பான ஓர் ஆன்மாவை நான் கண்டதில்லை. மூக்குப்பொடி போடும் விஷயமாகத் தங்களது அறிவுரைப் படி நடக்க எல்லா முயற்சியும் எடுத்திருக்கிறேன். சிறிது காலத்திலேயே இம் முயற்சியில் வெற்றி காண முடியும் என நம்புகிறேன். நம் நாட்டு அரசியல் நிலை பற்றி அவ்வப்போது நான் கவலை கொண்டாலும், என் சகாக்களுக்கு வழி காட்டவும், மக்களை முன்னின்று நடத்திச் செல்லவும் தாங்கள் அங்கு இருக்கிறீர்கள் என்பதிலிருந்து நம்பிக்கையும், உற்சாகமும் பெறுகிறேன். திரு சதாசிவத்துக்கும் அவர் தம் மனைவிக்கும் எனது வணக்கத்தைத் தயவு செய்து தெரிவிக்கவும். சென்ற மாதத்து 'ஸ்வராஜ்யா' இதழ்களை இங்கு அனுப்பி வைத்தால், மிக்க மகிழ்ச்சி அடைவேன். காந்தி ஜயந்தி பற்றிய தங்கள் கட்டுரையைக் 'கல்கி'யில் படித்தேன். அதில் பொதிந்திருந்த தங்களது ஆழ்ந்த தாபத்தை உணர்ந்தேன். சில ஆண்டுகளுக்கு முன் சென்னை மாநகராட்சியின் வரவேற்பில் தாங்கள் நிகழ்த்திய உரை என் நினைவுக்கு வந்தது. ஆயினும், தாங்கள் பொறுமையுடன், விதைத்துக் கொண்டிருக்கும் சிந்தனைகள், களர் நிலத்தில் விழுந்து விடவில்லை என்று திண்ணமாக நம்புகிறேன். எதிர் காலத்தில் பசும் பயிர்கள் எழும்புமென நம்புகிறேன்.

அன்பு வணக்கங்கள்.

(நன்றி : கல்கி)

Ambassador here. He is unto me a brother and I have never met a kinder soul or gentler spirit. I am making all efforts to act up to your advice - the snuff habit. I hope to succeed in that effort ere long. Though from time to time I feel the anxiety about the political situation in our Country, I get Confidence and encouragement from the fact that you are there to guide my Colleagues and lead our people. Please Convey my regards to Mr & Mrs. Sadasivam. I would be happy indeed if the issues of 'Swarajya' of last month are sent here. I read your note about Gandhi Jayanti in Kalki and felt the poignant feelings Couched therein and was reminded about your address some years ago in the Madras Corporation reception. But I am quite Confident that the thoughts you are so patiently sowing has not fallen on barren land and I am hopeful of the greens to Come. With kind regards,

I remain
Yours sincerely
C.N. Annadurai

# குடிநீருக்காகத் தினமும் ஒரு நீண்ட நடை தேவைதானா?



இப்பெண்மணி குடிநீருக்காகத் தினமும் 2 கி.மீ. தூரம் செல்ல நேரிடுகிறது. ஒரே தினத்தில் பல முறைகள் செல்கிறாள். மழையிலும் கடும் வெயிலிலும் இதே தொல்லை.

இதைத் தவிர்க்க ஏதேனும் செய்யப்படுகிறதா?

ஆம். தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய், கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்குச் செலவழிக்கப்படுகிறது. தமிழகம் முழுமையிலும் மொத்தம் 4,000 கிராமங்கள் இந்த வசதியினைப் பெறும்.

தமிழகத்தில் உள்ளவர்கள் அனைவரும் அல்லல்களிலிருந்து விடுதலை பெறும் வரையில் தமிழக அரசின் இந்தப் பணி தொடரும். மக்களுக்குக் குடிநீர் வழங்கும் இந்த மகத்தான பணி மும்முரமாக நடைபெறும்.

குலுக்கல் தேதி:
22. 9. '77

சீட்டு ஒன்றின் விலை:
ரூ. 1

## அதிக நபர்களுக்கு அதிகப் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 2 முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 50,00 |
| 3 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 10,00 |
| 5 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 5,00 |

மேலும் பல பரிசுகள் — கூடுதல் ஆறுதல் பரிசுகள் உட்பட.

மூன்று வரிசைகள். ஒவ்வொரு வரிசைக்கும் ரூ. 3,90,000 மதிப்புள்ள 2,655 பரிசுகள்.

வெளியிட்டோர்:
இயக்குநர்,
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்ட
சென்னை 600 002

**தமிழக அரசு பரிசுச் சீட்டு வாங்குங்கள் — மக்களின் நல்வாழ்வுக்கு உதவுங்கள்**

# அண்ணாவின் நாட்டுப்பற்று

பேரறிஞர் அண்ணா அவர்கள் நாட்டுப் பற்று அற்றவர் என்றும், பிரிவினைவாதி என்றும் கண்மூடித் தனமாய் பலர் எண்ணி வந்தார்கள். காலம் அவர்களின் கண்களைத் திறந்தது!

அண்ணா அவர்கள் நாட்டுப் பற்று மிக்கவர் என்பதும் பிரிவினைவாதி அல்ல என்பதும் பின் கண்ட நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவாகியது.

சேலத்தில் 1944-ல் நடைபெற்ற மாநாட்டில்தான் அண்ணா நீதிக்கட்சிக்குத் திராவிடர் கழகம் என்று பெயர் சூட்டவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்து வெற்றி பெற்றார்.

அண்ணா அந்த மாநாட்டில் கொண்டுவந்த தீர்மானங்களில் முதல் தீர்மானமாவது: "வெள்ளையன் ஆட்சியில் தரப்பட்ட 'சர்.' 'ராவ்பகதூர்', 'திவான்பகதூர்' 'சாகேப்' போன்ற கௌரவப் பட்டங்கள் பெற்றவர்கள் அந்தப் பட்டங்களைத் துறக்க வேண்டும். மீண்டும் அவர்களோ, மற்றவர்களோ அத்தகைய பட்டங்களையும், விருதுகளையும் வெள்ளையர்களிடமிருந்து பெறக் கூடாது."

அண்ணா தம்முடைய தீர்மானத்தில் 'வெள்ளையர்' என்றுகூடக் குறிப்பிடவில்லை. 'வெள்ளையன்' என்றே குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து நம்மை, அடிமைப் படுத்திக் கொடுமைகள் பல செய்த வெள்ளையர்கள் மீது அண்ணாவிற்கு இருந்த வெறுப்பு அளவு கடந்தது என்பது தெரிகிறதல்லவா?

அதே சமயம் அண்ணா இந்த நாடு விடுதலை அடைய வேண்டும் என்ற எண்ணம் நிறைந்தவர் என்பதும் தெரிகிறதல்லவா?

அந்த எண்ணம் இல்லாவிட்டால் வெள்ளையரை அண்ணா ஏன் வெறுக்கப் போகிறார்?

**

அண்ணாவின் நாட்டுப்பற்று இன்னும் ஒரு சமயம் குன்றின் மேல் ஏற்றப்பட்ட தீபம்போலப் பிரகாசிக்கத் தொடங்கியது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றது.

நாடு விடுதலை அடைவது கண்டு அண்ணா மகிழ்ச்சியடைந்தார்.

இந்திய நாடு விடுதலை அடைவதை மகிழ்ச்சிப் பெருநாளாகக் கொண்டாட வேண்டும் என்று அன்று ஆட்சியில் இருந்தவர்கள் அறிவித்தார்கள்.

பெரியார் நம் நாட்டைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்ற கொள்கை உடையவராக இருந்தார்.

பெரியார் சுதந்திர நாளை துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று அறிவித்தார்.

அண்ணா பெரியாரின் அறிவிப்பைக் கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்தார். வெள்ளையன் இந்த நாட்டை அடிமைப்படுத்தியவன் அவனால் நமது நாடு நீண்ட காலமாகப் பல துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறது.

கொடுமைகள் பல செய்த வெள்ளையன் நம் நாட்டை விட்டு போகும் நாள் நமக்கு எப்படித் துக்க நாளாகும் என்று எண்ணினார்.

இதனால், அண்ணா பெரும் சங்கடத்திற்கு ஆளானார். பெரும் தலைவர், தன்னுடைய வழிகாட்டி, தந்தையைப் போன்றவர், மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவர் அப்படிப்பட்ட பெரியார் சுதந்திர நாளை துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று சொல்கிறாரே, இப்பொழுது நம் கருத்தைச் சொன்னால் தலைவர் மனம் வருந்துமே என்று எண்ணினார்.

ஆயினும் அண்ணாவின் நாட்டுப் பற்றுத்தான் வெற்றி பெற்றது!

ஆகஸ்டு 15-ஆம் நாள் துக்க நாள் அல்ல. மகிழ்ச்சிக்கு உரிய நாளே என்பதை விளக்கி அறிக்கை ஒன்றை அண்ணா வெளியிட்டார்.

அந்த அறிக்கை பெரும் புயலையே கிளப்பியது என்று சொல்லலாம்.

அந்த அறிக்கையிலே அண்ணாவின் நாட்டுப்பற்று சுடர் விட்டுப் பிரகாசித்தது.

அந்த அறிக்கையில், 1939-ம் ஆண்டு முதலே அந்நியர் ஆட்சி கூடாது என்று கழகம் எதிர்த்து வந்திருக்கிறது என்பதை அண்ணா குறிப்பிட்டார்.

"நாட்டு விடுதலைக்காக காங்கிரசு கட்சிக்காரர்கள் செய்த தியாகங்களை நாம் பாராட்ட வேண்டும்" என்றும் அண்ணா குறிப்பிட்டார்.

யாருக்கு வரும் இந்த பரந்த மனப்பான்மை. மற்ற கட்சிக்



ஜெய்...

காரர்கள் செய்த நன்மையை, அண்ணாவைப் போல் வேறு யார் இப்படி மனம் திறந்து ஒப்புக் கொள்வார்கள்.

அண்ணா அரசியலில் சேர்ந்த காலம் முதல் கடைசி வரை நாட்டுப்பற்று மிகுந்தவராகவே விளங்கி வந்திருக்கிறார் என்பது தெள்ளத் தெளிந்த உண்மையாகும்.

அண்ணாவின் இந்த அறிக்கைக்குப் பிறகு அவர் வெள்ளையரின் ஆட்சியை ஆதரிப்பவர் என்று கூறிவந்தவர்கள் எல்லாம் வாயடைத்துப் போனார்கள்.

பெரியாரை எதிர்த்து அண்ணா அறிக்கை வெளியிட்டதால், கட்சியிலிருந்து அவருக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது.

ஆனாலும் அதைக் கண்டு மனம் தளரவில்லை. கடமையைச் செய்த மன நிறைவோடு அண்ணா சில காலம் கட்சியிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

அண்ணாவின் நாட்டுப்பற்று மற்றொரு முறையும் இந்நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது !

சீனா, இந்தியா மீது பகைமை கொண்டு போர் தொடுத்தது. அதைக் கண்டு பாராத மக்கள் மனம் கொதித்தார்கள். அதை எதிர்த்துத் தலைவர்கள் அணி திரட்டினார்கள். வேற்றுமை அனைத்தையும் மறந்து மக்கள் ஒன்று பட்டார்கள்; சீனாவுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார்கள். இப்போர் காரணமாக அண்ணாவும், மற்றவர்களும் சிறையிலிருந்து விடுவிக்கப் பெற்றார்கள் (அப்போது, விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக வேலூர் சிறையில் அடைக்கப் பெற்றிருந்தார்).

விடுதலையடைந்த அண்ணா வாளாயிருக்கவில்லை; சீனப் படையெடுப்பைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டார்; அயலாரை முறியடிக்க அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கழகத் தோழர்களுக்குக் கட்டளையிட்டார்; போரில் ஈடுபட்டிருந்த அரசுக்கு ஆதரவு அளிக்கும்படியும், பொருளுதவி புரியும்படியும் மக்களுக்கு வேண்டுகோள்களும் விடுத்தார். பகைவரை முறியடிக்கப் பாரத அரசுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு, அண்ணா வானொலியில் ஆங்கிலத்திலும், அருந்தமிழிலும் நிகழ்த்திய பேச்சுக்கள் உணர்ச்சியும் உயிரோட்டமும் நிறைந்தவையாகும்.

பேசியதோடு அவர் நின்றுவிடவில்லை. போர் நிதியும் திரட்டிக் கொடுத்தார். பகைவரின் படையெடுப்பை முறியடிக்கக் கழகம் என்றும் அரசுடன் ஒத்துழைக்கும் என்னும் உறுதிமொழியையும் அண்ணா அளித்தார். அவருடைய நாட்டுப்பற்றை என்னென்று புகழ்வது!

சீனப்படையெடுப்புக்குப் பிறகு நாட்டின் ஒற்றுமையைக் காக்க விரும்பிய அண்ணா, ''திராவிட நாடு பெறும் பிரிவினைக் கொள்கையைத் தி. மு. கழகம் கைவிட்டுவிட்டது'' என்று அறிவித்தார். அதை அறிந்த மக்கள் மனநிறைவும் மகிழ்ச்சியும் கொண்டார்கள்!.

**[வானதி பதிப்பகம் வெளியிட்ட 'அறிஞர் அண்ணாதுரை' என்ற நூலில் இருந்தும், பாரி நிலையம் வெளியிட்ட ''அறிஞர் அண்ணா'' என்ற நூலில் இருந்தும் தொகுக்கப் பட்டது.]**

நன்றி :

வானதி பதிப்பகம்,
தியாகராய நகர், சென்னை—17.

பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை—1.

# என் வாழ்வில் வசந்த காலம்!

எனக்கென்று ஒரு **''வசந்த காலம்''** இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு — அந்த 'வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலை மிக்க நாட்களிலே எழமுடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன். பெரியாருக்கு, அந்த 'வசந்தகாலமும்' தெரியும். இன்று நான் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும். 'வசந்த காலம்' என்றேனே, அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் 'காடு மேடு பல சுற்றி வந்த நிலை. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றிய போது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன். நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

ஒருவர் புறப்பட்டு, ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை. அந்த 'வரலாறு' துவக்கப்பட்டபோது நான் சிறுவன். அந்த வரலாற்றிலேயே புகழேடுகள் புதிது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே, ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றி இருக்கிறேன். அந்த நாட்களைத்தான் என் 'வசந்தம்' என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிறார். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பதனை நான் கற்று வரும் வாய்ப்பும் தந்தார். பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், அகமகிழ்வும், மன நிறைவும் பெற்றிடச் செய்தார். எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்று, தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது குடும்பத்தில் பிறவாப் பிள்ளை எனக் கொண்டிருந்தார்.

—பேரறிஞர் அண்ணா

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினுல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"



''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்

பதிவு எண். M. 8676

# தமிழரசு

